# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

கொள்கை விளக்கக் குறிப்பு
2026 – 2027

மானியக் கோரிக்கை எண். 15


**டாக்டர் வே. க. ராஜீவ்**
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை
மாற்றத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

# சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

## அட்டவணை


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–3 |
| 2 | தொலைநோக்கு, பணிகள் மற்றும் செயல்திட்டங்கள் | 4–13 |
| 3 | சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான வழிமுறைகள் | 13–18 |
| 4 | துறையின் முக்கிய இயக்கங்கள் | 18–50 |
| 5 | கடலோர மண்டல மேலாண்மை | 50–65 |
| 6 | மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்–தமிழ்நாடு | 65–71 |
| 7 | தமிழ்நாடு கடல்சார் வள அறக்கட்டளை | 71–74 |
| 8 | தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை | 74–76 |
| 9 | காலநிலை அரங்கம் | 76–79 |
| 10 | நீலக்கொடி கடற்கரைச் சான்றிதழ் திட்டம் | 79–82 |
| 11 | சுற்றுச்சூழல் கல்வித் திட்டம் | 82–84 |
| 12 | நிறைவுரை | 84–86 |

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## அட்டவணை


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 87–90 |
| 2 | வாரியத்தின் பணிகள் | 90–93 |
| 3 | நிறுவன அமைப்பு | 93–94 |
| 4 | இசைவாணை செயல்முறை | 95–100 |
| 5 | சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலி தர கண்காணிப்பு | 101–128 |
| 6 | கழிவு மேலாண்மை செயல்முறை | 128–167 |
| 7 | விதிமீறலில் ஈடுபடும் தொழிற்சாலைகளுக்கான சட்ட அமலாக்க நடைமுறை | 167–170 |
| 8 | இதர செயல்பாடுகள் | 170–174 |
| 9 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 174–182 |
| 10 | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சீர்திருத்தங்கள் | 182–190 |
| 11 | இணைப்புகள் | 191–193 |

# கொள்கை விளக்கக் குறிப்பு 2026–2027

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

*"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"*

**திருக்குறள் – 737**

ஊற்றும், மழையும் ஆகிய இருவகை நீர்வளமும், தக்கவாறு அமைந்த மலையும், அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர்வளமும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புகளாகும்.

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சூழலியல் நிலைத்தன்மை மற்றும் காலநிலை மீள்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1995 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இயற்கைச் சூழலமைப்புகள், நீர்வளங்கள், வேளாண்மை, பல்லுயிர் பெருக்கம், பொது சுகாதாரம் மற்றும் மக்களின்

வாழ்வாதாரம் ஆகியவற்றை பாதிக்கும் உலகின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக காலநிலை மாற்றம் தற்போது உருவெடுத்துள்ளது. இந்தியாவின் மிகவும் தொழில்மயமான மாநிலங்களில் ஒன்றாகவும், 1,068.69 கி.மீ. நீள கடற்கரையைக் கொண்ட மாநிலமாகவும் உள்ள தமிழ்நாடு, தீவிர வானிலை நிகழ்வுகள், கடல்மட்ட உயர்வு, பல்லுயிர் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு போன்ற காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு பாதிக்கப்படக்கூடிய மாநிலமாக உள்ளது.

இதனை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, நிலையான வளர்ச்சி, சூழலியல் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை மீள்திறனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம் மற்றும் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் ஆகியவற்றின் மூலம், சுற்றுச்சூழல் ஆளுமை மற்றும் காலநிலை

நடவடிக்கைகளில் தேசிய அளவில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பு, பல்லுயிர் பாதுகாப்பு, இயற்கை வளங்களின் நிலைத்தகு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகளை வடிவமைத்து செயல்படுத்தும் மாநிலத்தின் முதன்மை ஒருங்கிணைப்பு அமைப்பாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை செயல்பட்டு வருகிறது. அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், குடிமைச் சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் ஒருங்கிணைந்த பங்களிப்புடன், இயக்க அடிப்படையிலான செயலாக்கத்தின் மூலம், பசுமையான, காலநிலை மீள்திறன்மிகு மற்றும் கார்பன் சமநிலையுடன் கூடிய எதிர்காலத்தை நோக்கி தமிழ்நாடு முன்னேறி வருகிறது.

## 2. தொலைநோக்கு, பணிகள் மற்றும் செயல்திட்டங்கள்

### 2.1. தொலைநோக்கு

இயற்கைச் சூழலமைப்புகளைப் பாதுகாத்தல், பல்லுயிர் வளத்தை மேம்படுத்தல், பசுமைப் பரப்பை அதிகரித்தல், இயற்கை வளங்களின் நிலைத்தகு பயன்பாட்டை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, நிலையான வளர்ச்சி மற்றும் காலநிலை மீள்திறன்மிகு பொருளாதாரத்தில் உலகளவில் முன்னுதாரணமாகத் திகழும் தமிழ்நாட்டை உருவாக்கி, தற்போதைய மற்றும் எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் வளமான வாழ்வை உறுதி செய்வதாகும்.

### 2.2. பணிகள்

காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்துதல், வனங்கள், சதுப்புநிலங்கள், நீர்நிலைகள் மற்றும் கடலோரச் சூழலமைப்புகளைப்

பாதுகாத்து மறுசீரமைத்தல், கரிமத் தேக்கத்தினை அதிகரித்தல், நிலைத்தகு வாழ்வாதாரங்களை உருவாக்குதல் மற்றும் அறிவியல் அடிப்படையிலான, சமூகப் பங்களிப்புடன் கூடிய முன்னெடுப்புகளை செயல்படுத்துவதின் மூலம் தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதாகும்.

மேலும், இயற்கை சார்ந்த தீர்வுகளை ஊக்குவித்தல், கார்பன் சமநிலை வளர்ச்சிப் பாதைகளை உருவாக்குதல், சுற்றுச்சூழல் ஆளுமையை வலுப்படுத்துதல் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றை இயக்க அடிப்படையிலான செயலாக்கம் மற்றும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பின் மூலம் முன்னெடுத்துச் செல்லுதல்.

## 2.3. செயல்திட்டங்கள்

1. தேசிய மற்றும் சர்வதேச குறிக்கோள்களுக்கு இயைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றத் தணிப்பு, தகவமைப்பு மற்றும் நிலையான வளர்ச்சிக்கான விரிவான கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.

2. அறிவியல் அடிப்படையிலான திட்டமிடல், காலநிலை இடர் மதிப்பீடு மற்றும் காலநிலை மீள்திறன்மிகு உள்கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் அனைத்து துறைகளிலும் காலநிலை மீள்திறனை வலுப்படுத்துதல்.

3. நீண்டகால சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் காலநிலை மீள்திறனை உருவாக்க, காலநிலை மீள்திறன்மிகு தமிழ்நாடு

பெருந்திட்டம், 2045–ஐ தயாரித்து செயல்படுத்துதல்.

4. காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தவும் இயற்கை சார்ந்த தீர்வுகள் மற்றும் சூழலமைப்பு அடிப்படையிலான தகவமைப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

5. விவசாயிகள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்காக கார்பன் தேக்கம், கார்பன் சந்தை மற்றும் கார்பன் வர்த்தக வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

6. ஒருங்கிணைந்த நிலப்பரப்பு மற்றும் சூழலமைப்பு மேலாண்மை அணுகுமுறைகள் மூலம் பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சூழலியல் சேவைகளை வலுப்படுத்துதல்.

7. நிலம், நீர், காடுகள் மற்றும் ஆற்றல் உள்ளிட்ட இயற்கை வளங்களை

சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் நிலையான வகையில் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

8. தமிழ்நாட்டின் கடற்கரையை காலநிலை மாற்றம் மற்றும் கடலோர இடர்பாடுகளிலிருந்து பாதுகாக்க, அறிவியல் மற்றும் சமூகங்களை மையமாகக் கொண்ட கடலோரப் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பசுமைப் போக்குவரத்து, ஆற்றல் திறன், பசுமைக் கட்டடங்கள் மற்றும் குறைந்த கார்பன் வளர்ச்சிப் பாதைகளை ஊக்குவித்து பசுங்குடில் வாயு உமிழ்வைக் குறைத்தல்.

10. இயக்க அடிப்படையிலான செயலாக்கம், துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பு

ஆகியவற்றின் மூலம் சுற்றுச்சூழல் ஆளுமையை வலுப்படுத்துதல்.

11. மாணவர்கள், இளைஞர்கள், உள்ளூர் சமூகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, காலநிலை கல்வியறிவு மற்றும் திறன் மேம்பாட்டினை ஊக்குவித்தல்.

12. காலநிலை அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மையை நவீனப்படுத்த கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மேம்பாட்டுத் தோழமைகளுடன் இணைந்து ஆராய்ச்சி, புதுமை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

13. பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கவும், சமூகப் பங்கேற்புடன் கூடிய சுற்றுச்சூழல்

பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளை ஊக்குவிக்கவும் ஆதரவு வழங்குதல்.

14. ஆதாரப்பூர்வமான கொள்கை உருவாக்கம் மற்றும் தகவமைப்பு மேலாண்மைக்காக வலுவான சுற்றுச்சூழல் கண்காணிப்பு, காலநிலை தகவல் ஆதரவு அமைப்புகளை உருவாக்குதல்.

15. காலநிலை இடர் மேலாண்மையை வலுப்படுத்துதல், அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையிலான தகவமைப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் சமூகங்கள், சூழலமைப்புகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் மீள்திறனை மேம்படுத்துதல்.

16. இயற்கை சார்ந்த தீர்வுகள், நிலையான திட்டமிடல் மற்றும் வெப்ப அழுத்தத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள் மூலம் வெப்பத் தாக்கத்தைத் தணித்தல் மற்றும் பொது

சுகாதாரத்தைப் பாதுகாப்பதன் மூலம் காலநிலை மீள்திறன்மிகு நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல்.

17. தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளின் நலனுக்காக தூய்மையான, பசுமையான, காலநிலை மீள்திறன்மிகு தமிழ்நாட்டை உருவாக்குதல்.

## 2.4. துறையின் பணிகள்

- தமிழ்நாடு அரசிற்கான சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகளை வடிவமைத்தல்.

- மாநிலத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் கட்டமைப்பை உருவாக்கி, கொள்கை முன்னெடுப்புகளை உருவாக்க வழிவகுத்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளை

ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை மூலம் ஒருங்கிணைத்தல்.

- காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பு தொடர்பாக அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், பள்ளிகள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், அரசு சாரா அமைப்புகள், சூழல் மன்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் கல்வித் திட்டம் ஆகியவற்றுக்கான திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க (EIA) அறிவிக்கையின் சட்டப்பூர்வ விதிமுறைகளை செயல்படுத்துதல்.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் பொறுப்பில் உள்ள பணிகளைத் தவிர, சுற்றுச்சூழல்

பாதுகாப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை ஒருங்கிணைக்கிறது. மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான திட்டங்கள், செயல்திட்டங்கள் மற்றும் திட்டமிடல்களை உருவாக்கி மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு துறையாகவும் செயல்படுகிறது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் செயல்படும் சுற்றுச்சூழல் கல்வித் திட்டம் மற்றும் சூழல் மன்றங்கள் ஆகியவற்றின் விரிவான வலையமைப்பின் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதிலும் இத்துறை முக்கியப் பங்காற்றுகிறது.

## 3. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான வழிமுறைகள்

நிலைத்த பொருளாதாரம் என்பது பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூகங்களை உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய செயல்முறையின் ஒருங்கிணைந்த கூறுகளாகக்

கொண்டு முன்னெடுக்கப்படும் அணுகுமுறையாகும். இது தற்போதைய தலைமுறையின் தேவைகள் மற்றும் வளர்ச்சி இலக்குகளைப் பூர்த்தி செய்வதோடு, வருங்கால தலைமுறையினர் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனை பாதிக்காத வகையில் வளங்களைப் பயன்படுத்துவதை வலியுறுத்துகிறது. மேலும், மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சியின் மூலம் சமத்துவம், காலநிலை நீதி மற்றும் பேரிடர்களை எதிர்கொள்ளும் தாங்குதிறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலகளவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை முதன்முதலில் அரசியலமைப்பில் அங்கீகரித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன், நாட்டின் வனங்கள் மற்றும் வனவிலங்குகளை பாதுகாக்க அரசு முயற்சிக்கும் என்று, 42-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம்

அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 48(A)–இல் இடம்பெற்றுள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் அடிப்படைக் கடமைகளில் இடம்பெற்றுள்ள பிரிவு 51A(g)–இன் படி, "காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதும், அனைத்து உயிரினங்களிடமும் பரிவுடன் நடந்து கொள்வதும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமையாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள்நல அரசை உருவாக்குவதற்கான அடிப்படைக் கட்டமைப்பினை இந்திய அரசியலமைப்பு வழங்குவதால், நாட்டின் அளவான இயற்கை வளங்கள், மக்களின் நலன் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

இதுவே நிலையான வளர்ச்சியின் அடிப்படை நோக்கமாகும். இயற்கை வளங்கள் மற்றும்

உயிர்வாழ்விற்கு ஆதாரமான சூழலியல் அமைப்புகளின் மீது ஏற்படும் அழுத்தத்தைத் தவிர்ப்பதற்காக, இயற்கை வளப்பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகளைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகிறது.

- **சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டம், 1986,** சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய அம்சங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1986–ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

- **சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை,** 2006, இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் புதிய திட்டங்கள், புதிய செயல்பாடுகள், தற்போதுள்ள செயல்பாடுகளின் விரிவாக்கம் அல்லது நவீனமயமாக்கல் ஆகிய பணிகளை

மேற்கொள்ளும்போது, அவற்றினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கவனத்தில் கொண்டு அத்திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை விதிக்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

- **கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை,** மீனவர் சமுதாயம் மற்றும் பிற உள்ளூர் சமுதாயங்களுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டம், 1986–இன் மூலம், கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 1991, முதன்முதலில் நடைமுறைக்கு வந்தது.

இதன் தொடர்ச்சியாக, அறிவியல் அடிப்படையிலான கொள்கைகள், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் கடல்நீர் மட்டம் உயர்வதையும் கவனத்தில் கொண்டு நிலையான வளர்ச்சியை அடைவதற்காக 2011 மற்றும் 2019–ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

## 4. துறையின் முக்கிய இயக்கங்கள்

### 4.1. தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்

தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனமானது நம் மாநிலத்தின் காலநிலை நடவடிக்கைகள் மற்றும் நிலைத்தன்மைக்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட ஒரு தனிச்சிறப்பு நிறுவனமாகும். ஒரு ஒருங்கிணைப்பு முகமையாக, இந்நிறுவனம் தமிழ்நாட்டின் சிறப்புமிகு நான்கு இயக்கங்களின் ஒருங்கிணைப்பு, செயலாக்கம், அரசுத்துறைகள் மற்றும் தோழமை நிறுவனங்களுக்கிடையே

ஒருங்கிணைவுகளை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மீள்திறனை வளர்த்தெடுக்கக்கூடிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

காலநிலை மாற்றத்தினை ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் நான்கு முக்கிய இயக்கங்களை முன்னெடுத்து வருகிறது.

அ. பசுமை தமிழ்நாடு இயக்கம்

ஆ. தமிழ்நாடு ஈரநில இயக்கம்

இ. தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

ஈ. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

இந்நான்கு இயக்கங்களையும் திறம்படச் செயல்படுத்தும் வகையில், ஒரு கட்டமைக்கப்பட்ட நிறுவன மற்றும் கண்காணிப்புச் செயல்முறை உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய இயக்கங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், செயல்திறனை மதிப்பிடவும், உரிய நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவவும், தகவல் பலகைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**அ. பசுமை தமிழ்நாடு இயக்கம்**

பசுமை தமிழ்நாடு இயக்கமானது, நம் மாநிலத்தின் பசுமைப் பரப்பினை அதிக அளவிலான காடு வளர்ப்பு, சூழலியல் மீட்டுருவாக்கம் மற்றும் நிலைத்தகு நில மேலாண்மை ஆகியவற்றின் மூலம் 33% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட இயக்கமாகும். இவ்வியக்கம், சிதைவுற்ற காடுகள், தரிசு நிலங்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பொது இடங்களை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்துவதோடு, பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்தவும், கார்பன் சேமிப்பகங்களை வலுப்படுத்தவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும், உள்ளூர்

மக்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளிக்கவும், உள்ளூர் தாவர இனங்களையும் மற்றும் சூழலுக்கு ஏற்ற மரக்கன்றுகள் வளர்ப்பதையும் ஊக்குவிக்கிறது.

இவ்வியக்கம், ஒருங்கிணைவு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த அணுகுமுறையைக் கடைபிடித்து பல்லுயிர் பெருக்கம், கார்பன் தேக்கம் மற்றும் நிலப்பரப்பின் மீள்திறன் மேம்பாடு ஆகிய சூழலியல் நன்மைகளை அதிகரிக்கச் செய்யும் அதேவேளையில், வேளாண் காடு வளர்ப்பு, மியாவாக்கி நகர்ப்புறக் காடுகள், சாலையோர மரங்கள் மற்றும் நிறுவனங்களின் காடுவளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நடவு மாதிரிகளை முன்னிறுத்துகிறது.

**ஆ. தமிழ்நாடு ஈரநில இயக்கம்**

தமிழ்நாடு ஈரநில இயக்கமானது, அறிவியலை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடல், கொள்கைகளில் புதுமை மற்றும் சமூகப் பங்கேற்பு ஆகியவற்றின் மூலம் ஈரநிலங்களைப் பாதுகாத்தல், மீட்டெடுத்தல்

மற்றும் நிலையான முறையில் நிர்வகித்தல் ஆகிய பணிகளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட முன்னெடுப்பாகும். இது தமிழ்நாடு முழுவதும் உள்ள ஈரநிலங்களை வரைபடமாக்குதல் மற்றும் வகைப்படுத்துதல், ஆக்கிரமிப்பு மற்றும் மாசுபாட்டைத் தடுத்தல், சீரழிந்த ஈரநிலங்களை மீட்டெடுத்தல், மற்றும் சூழல் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த ஈரநில மேலாண்மைத் திட்டங்களைத் தயாரித்தல் ஆகிய பணிகளை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மக்களிடையே விழிப்புணர்வு மற்றும் திறன்வளர் முன்னெடுப்புகள் மூலம் பல்லுயிர்ப் பாதுகாப்பு, நிலத்தடி நீர் மேம்பாடு, காலநிலை மீள்திறனை வலுப்படுத்துதல் மற்றும் சமூக பங்கேற்பினை ஊக்குவித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், மாநிலத்தின் விலை மதிப்பற்ற ஈரநில சூழல் அமைப்புகளின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் நிலைத்தகு பயன்பாட்டினை உறுதி செய்கிறது.

**இ. தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்**

தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கமானது, கடலோர மீள்திறன் மற்றும் ஒருங்கிணைந்த நீலப் பொருளாதார அணுகுமுறையின் மூலம் நிலைத்தகு முறையில் கடல்சார் வள மேலாண்மையினை ஊக்குவிப்பதை நோக்கமாகக்கொண்டு உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டமாகும். இத்திட்டமானது, கடல்சார் உயிர்ப்பன்மய மேம்பாடு, கடலோரப் பாதுகாப்பு, வாழ்வாதார மேம்பாடு, மாசு ஒழிப்பு மற்றும் சூழல் அமைப்புகளை வலுப்படுத்தக்கூடிய திட்டங்களின் மேலாண்மை மற்றும் காலநிலை மீள்திறன் வளர்ப்பு ஆகிய ஐந்து துறைகளில் கவனம் செலுத்துகிறது.

**ஈ. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்**

காலநிலை மாற்றம், இருபத்தியோராம் நூற்றாண்டில் மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டு அரசுக்குழு (IPCC) மற்றும் பிற முன்னணி

நிறுவனங்களின் அறிவியல் பூர்வமான சான்றுகள் ஆகியவை புவி வெப்பநிலை முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் அதிகரித்து வருவதை உறுதிப்படுத்துகின்றன. மேலும், தீவிர வானிலை நிகழ்வுகள், கடல் மட்ட உயர்வு, பல்லுயிர் இழப்பு, நீர் பற்றாக்குறை, உணவுப் பாதுகாப்பின்மை, பொது சுகாதார இடர்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சீர்குலைவுகள் ஆகியவற்றின் வாயிலாக இதன் விளைவுகள் ஏற்கெனவே வெளிப்படத் தொடங்கிவிட்டன.

தமிழ்நாடு, தனது புவியியல் அமைப்பு, நீண்ட கடற்கரை, காலநிலை உணர்திறன்மிகு துறைகளைச் சார்ந்திருத்தல் மற்றும் வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புற மையங்கள் ஆகியவற்றின் காரணமாக, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஆளாகும் இடர்பாடுகளை அதிகம் கொண்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் தொடர் வெள்ளம், புயல்கள், வறட்சி, வெப்ப அலைகள், கடல் அரிப்பு மற்றும் சூழலியல் சிதைவு ஆகிய பல்வேறு நிகழ்வுகளை நம் மாநிலம்

எதிர்கொண்டுள்ளது. இவை உயிர், வாழ்வாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பெரும் இழப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

நம் மாநில மக்களுக்கு நிலையான மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில், காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்துவதற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத் தணிப்பு, அதற்கேற்ற தகவமைப்பு மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றின் பலன்களை அதிகப்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த மற்றும் சான்றுகளின் அடிப்படையிலான திட்டமிடலைக் கையாள்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். மேலும், கொள்கை உருவாக்கம் மற்றும் அதன் செயலாக்கத்தில், தமிழ்நாடு தனது கல்வி மற்றும்

ஆய்வு நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொள்ளும். அதுமட்டுமல்லாது, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் குறித்த துறைசார் புரிதலை மேம்படுத்துவதையும், கார்பன் உமிழ்வு குறைப்பு, வளங்களைத் திரட்டுதல் மற்றும் நிலையான உள்கட்டமைப்பு மூலம் மேம்பட்ட மீள்திறனை உறுதி செய்தல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இவ்வியக்கம் செயல்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் இயக்குநர், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் முதன்மைத் திட்ட இயக்குநராக மாநிலத்தின் காலநிலைசார் பிரச்சினைகளை ஒருங்கே மேற்பார்வையிட்டு செயல்பட்டு வருகிறார்.

**மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம்**

மாவட்ட அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் காலநிலை மாற்றத்திற்கெதிரான தடுப்பு மற்றும்

தகவமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், அரசு நிர்வாகத்தின் அடிப்படையளவில் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், அனைத்து 38 மாவட்டங்களிலும் மாவட்டக் காலநிலை மாற்ற இயக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் இவ்வமைப்பின் திட்ட இயக்குநராக செயல்படுகிறார். சென்னையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் திட்ட இயக்குநராகச் செயல்படுகிறார். அதேவேளையில், மாவட்ட வன அலுவலர் மாவட்ட காலநிலை அலுவலராக செயல்படுகிறார்.

நிறுவனத்திறனை வலுப்படுத்துவதையும், காலநிலை நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான வழிமுறை உருவாக்கத்தையும் நோக்கமாகக்கொண்டு, மாவட்ட அளவில் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக

மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்கள் திகழ்ந்து வருகிறது. இக்குறிக்கோள்களுக்கு ஆதரவாக, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையானது அனைத்து 38 மாவட்டங்களிலும் தொடர்புடைய துறையினருக்கு காலநிலை விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், துறைசார் திட்டங்களில் காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் தடுப்பு உத்திகளை ஒருங்கிணைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலான பங்குதாரர்கள் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் முக்கிய முன்னெடுப்புகளை மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களின் வாயிலாக செயல்படுத்தி வருவதன் மூலமும், பங்குதாரர்களின் ஒருங்கிணைவு மற்றும் செயலாக்கத்தின் மூலம் மாவட்டங்களுக்கேற்ற பரவலாக்கப்பட்ட தனித்துவமான காலநிலை நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 4.2. இயற்கைசார் தீர்வுகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தகவமைத்துக்கொள்ளும் வகையில் கடலோர வாழ்விடங்களை சீரமைத்தல்

சுற்றுச்சூழலுக்குகந்த இயற்கைசார் தீர்வுகள் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில், கடலோரச் சூழல் மண்டலங்கள் மற்றும் அவற்றின் மீள்திறனை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மொத்தம் 355 ஹெக்டேர் பரப்பளவில் மாற்றியமைக்கப்பட்ட மீன்முள் முறையைப் பயன்படுத்தி அலையாத்தி, சவுக்கு மற்றும் முந்திரி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன; மேலும், சுமார் 700 ஹெக்டேர் பரப்பளவில் சிதைவடைந்த அலையாத்திக் காடுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, 190 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு மரக்கன்றுகளும், 120 ஹெக்டேர் பரப்பளவில் பனை மரக்கன்றுகளும் நடவு செய்யப்பட்டுள்ளன.

### 4.3. காலநிலை மீள்திறன்மிகு கிராமங்கள்

தமிழ்நாடு, இந்தியாவின் மிகவும் நகர்மயப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்த போதிலும், மாநிலத்தின் மக்கள் தொகையில் ஏறக்குறைய சரிபாதி பேர் இன்றும் கிராமப்புறங்களிலேயே வசிக்கின்றனர். அங்கு விவசாயம், மீன்பிடித்தல் மற்றும் அது சார்ந்த தொழில்கள் உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதாரமாக உள்ளன, அதேவேளையில், இச்சமூகங்கள் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளுக்கு ஆளாகக்கூடிய அபாயத்தின் விளிம்பிலும் உள்ளன. இத்திட்டம் நிலைத்தகு வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில் உள்ளூர் சமூகங்களின் மீள்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், உள்ளூர் அளவிலான நேரடி மற்றும் மறைமுக காலநிலை இடர்பாடுகளை நிர்வகிப்பதற்கான புதுமையான உத்திகளைச் செயல்படுத்த பல்வேறு துறையினருக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் இத்திட்டம் வாய்ப்பை

வழங்குகிறது. சரியான நேரத்தில் வழங்கப்படும் வானிலை மற்றும் காலநிலை தொடர்பான அறிவுறுத்தல்களின் உதவியுடன் தகவல்கள் விரைவாகப் பரிமாறப்படுவதை எளிதாக்கவும், உள்ளூர் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட காலநிலைக்கேற்ற தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும் உதவக்கூடிய புதிய நிறுவனக் கட்டமைப்புகளை உருவாக்குவதையும் இத்திட்டம் முன்னிறுத்துகிறது.

இத்திட்டமானது, தமிழ்நாட்டில் பிச்சாவரம், கோடியக்கரை, முத்துப்பேட்டை, ஒகேனக்கல், ஏற்காடு, கொடைக்கானல், உதகமண்டலம், குற்றாலம், திருச்செந்தூர், இராமேஸ்வரம் மற்றும் கோவளம் ஆகிய 11 இடங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது.

இவற்றில், கடலூர் மாவட்டம் பிச்சாவரத்தில் உள்ள கிள்ளை கிராமம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் கிராமமாகத் திகழ்கிறது. இங்கு சுற்றுச்சூழல்

நிலைத்தன்மையை மேம்படுத்தவும் உள்ளூர் சமூகங்களின் மீள்திறனை வலுப்படுத்தவும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு, நீர்நிலைப் பாதுகாப்பு, அலையாத்திக் காடுகள் வளர்ப்பு மற்றும் பசுமை வேலைவாய்ப்புகள் மூலம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.4. முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வு திட்டம்

முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டமானது, காலநிலை நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தும் பொருட்டு, இந்தியாவில் முதன்முறையாக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்முயற்சியாகும். தமிழ்நாட்டின் காலநிலை பாதிப்புக்குள்ளாகும் தன்மையையும், தேசிய இலக்குகளுக்கு முன்னதாகவே கார்பன் சமநிலையை அடைவதற்கும் நம் மாநிலத்தின் மீள்திறனை உருவாக்கவும், அர்ப்பணிப்பையும் அங்கீகரித்து, இத்திட்டம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை

பிரச்சினைகள் குறித்து ஆர்வமுள்ள இளைஞர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு வழிகாட்டுகிறது. நிலைத்தகு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவும், தமிழ்நாட்டின் காலநிலை மீள்திறன்மிகு எதிர்காலத்திற்கு பங்களிக்கவும், திறமை மற்றும் அர்ப்பணிப்புமிகு இளம் தலைவர்களின் ஒரு குழுவை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசு, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனத்தினை அறிவுசார் தோழமையாகக் கொண்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில், 40 பசுமைத் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டனர். பின்னர், காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதில் மாவட்ட நிர்வாகங்களுக்கு உறுதுணையாகத் திகழும் வகையில் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், சுமார் 9,000–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களிலிருந்து போட்டித் தேர்வு முறை மூலம் 38 பேர் கொண்ட புதிய பசுமைத் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்பட்டனர். இவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பணியமர்த்தப்பட்டு, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வன அலுவலர்களுடன் இணைந்து, மாவட்ட அளவிலான காலநிலை மாற்றத் திட்டத்தின் செயல்பாடுகளை ஒருங்கிணைந்து செயல்படுத்துவதில் உதவி வருகின்றனர். மேலும், இவர்களது தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தலைமைத்துவத் திறன்களை வலுப்படுத்தும் வகையில், முறையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை குறித்த சிறப்பு முதுகலைப் பட்டயப் படிப்பும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பிரச்சாரங்கள் வாயிலாகப் பல்வேறு தரப்பினரிடையே மாவட்டங்கள்தோறும் நடத்துவதற்கு இத்திட்டம் உதவி வருகிறது.

## 4.5. காலநிலைக் கல்வியறிவு மற்றும் காலநிலைக் கல்வி முன்னெடுப்பு

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கமானது, காலநிலை அறிவியல் குறித்த கல்வியை வழங்குவதன் மூலம், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே ஏற்படுத்த இதன் மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஊடகம் மற்றும் டிஜிட்டல் தகவல் தொடர்பு தளங்கள் வாயிலாக, காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளைக் கண்டறிவதுடன், காலநிலைமாற்ற தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளிலும்

இம்முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது. இம்முன்னெடுப்பின் கீழ் காலநிலை மாற்ற விழிப்புணர்வு பிரச்சாரங்கள், குழு விவாதங்கள், டிஜிட்டல் சுவரொட்டி உருவாக்கம், தெருக்கூத்துகள், சிறு நாடகங்கள், வலையொலி மற்றும் பொதுப் பிரச்சாரங்கள் போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

காலநிலைக் கல்வியறிவு எனும் பிரிவின் கீழ் பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- பள்ளி மாணவர்களுக்காக விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய காலநிலை தொடர்பான மகிழ்ச்சியான கற்றல் அமர்வுகள் வடிவமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 500 அரசுப் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.
- பள்ளி மாணவர்களுக்கான காலநிலை விழிப்புணர்வு பாடத்திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

- மாநிலம் முழுவதும் சுமார் 58,000 பள்ளிகளை காலநிலை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுத்தும் வகையில் விரிவான செயல்பாட்டு நாட்காட்டி ஒன்று உருவாக்கப்பட்டது. அது, சிறப்புச் செயல்பாடுகள், கருப்பொருள் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் உறுதிமொழி ஏற்பு ஆகியவற்றின் மூலம் மாணவர்களிடையே சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறித்த விழிப்புணர்வையும் செயல்பாட்டையும் ஊக்குவிப்பதற்கான ஒரு கட்டமைப்பாகத் திகழ்ந்து வருகிறது.

- சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், சுமார் 13,000 அரசுப் பள்ளி மாணவர்களின் பங்கேற்புடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கோடைக்கால மற்றும் குளிர்கால இயற்கை முகாம்கள் நடத்தப்பட்டன.

- தமிழ்நாடு முழுவதும் 21 கல்வி நிறுவனங்களில் காலநிலை விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. இதில் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 3,000 கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

- மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட 4,000 ஆசிரியர்களுக்கு காலநிலை மாற்றம் குறித்த உறைவிடப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தத் திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக, சேலம் மாவட்டம் ஏற்காட்டில் ஒரு பயிற்சி முகாம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

### 4.6. பசுமை பள்ளிகள் திட்டம்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, இளைய தலைமுறையினரும், குழந்தைகளும் அதன் தாக்கங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குத் தயாராக இருப்பது அவசியமாகும். எனவே, மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும்,

காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய வகையிலான பள்ளி உள்கட்டமைப்பை உருவாக்கவும் பசுமை பள்ளித் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 297 பள்ளிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் விளக்குகள் மற்றும் நீர் இறைக்கும் பம்புகளுக்கு வழக்கமான மின்சாரத்திற்குப் பதிலாக சூரிய ஆற்றலைப் பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரித்தல், காய்கறி மற்றும் மூலிகைத் தோட்டங்கள் அமைத்தல், பழ மரங்களை நடுதல், நீர் மேலாண்மை, கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் நெகிழி இல்லாத சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு பசுமை நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.59.40 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய, மாவட்ட ஆட்சியரின் தலைமையில்

ஒவ்வொரு மாவட்டத்திலும் பசுமை பள்ளிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 4.7. கார்பன் சமநிலை மையங்கள்

நீலகிரி, கோயம்புத்தூர், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்கள் கார்பன்– சமநிலை மையங்களாக மாற்ற அடையாளம் காணப்பட்டு, அம்மாவட்டங்களில் உள்ள பல்வேறு பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து, அம்மாவட்டங்களுக்கான கார்பன் உமிழ்வினைக் குறைப்பதற்கான செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டின் காலநிலைச் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கான இணையவழி கண்காணிப்புத் தளம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

## 4.8. காலநிலைக்கேற்ற வாழ்வியல்முறை

இம்முன்னெடுப்பு, நம் மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் சூழலியல் பாதுகாப்பை

ஊக்குவிப்பதோடு, காலநிலை மாற்றத்திற்கெதிரான மாநிலத்தின் மீள்திறனை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கட்டடங்களில் நிலைத்தகு நடைமுறைகள் மற்றும் வளத்திறன்மிகு நடவடிக்கைகளை அங்கீகரிப்பதன் மூலம், தற்போதுள்ள கட்டடங்களுக்கு ஒரு விரிவான பசுமைக் கட்டடச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை நிறுவுவதே இதன் முதன்மை நோக்கமாகும். இதை எளிதாக்கும் பொருட்டு, முன்னரே வரையறுக்கப்பட்ட நிலைத்தன்மை அளவுகோல்களின் அடிப்படையில் கட்டடங்களை மதிப்பீடு செய்யவும், தரவரிசைப்படுத்தவும், சான்றளிக்கவும் தனியே ஒரு டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சான்றிதழ், தமிழ்நாட்டை ஒரு பசுமையான, காலநிலை மீள்திறன் கொண்ட மற்றும் நிலையான எதிர்காலத்தை நோக்கிய மாநிலமாக மாற்றுவதற்கு பங்களிக்கும் தனியார் பங்குதாரர்களுக்கு ஒரு நம்பிக்கைமிகு அங்கீகாரமாகத் திகழும்.

## 4.9. அரசு கட்டடங்களின் மறுசீரமைப்பு

அரசு கட்டடங்களைப் புதுப்பிப்பதன் மூலம் அக்கட்டடங்களில் ஆற்றல் திறன் மேம்பாடு, பசுங்குடில் வாயு உமிழ்வுக் கட்டுப்பாடு மற்றும் காலநிலை மீள்திறன் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தி அதன் மூலம் வெப்ப நலன் மேம்பாடு, வெப்ப அழுத்தக் குறைப்பு, நிலைத்தகு பொது உள்கட்டமைப்பு உருவாக்கம் போன்ற பலன்களை அடைய முடியும். சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் ராஜீவ் காந்தி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் கார்பன் தடத்தைக் குறைக்கும் வகையில், காலநிலை மீள்திறன் மற்றும் நிலைத்தகு நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 4.10. தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டம்

நாட்டின் பிற பகுதிகளைப் போலவே தமிழ்நாடும் வெப்பநிலை உயர்வு, மழைப்பொழிவு முறைகளில் மாற்றம் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளின்

அதிகரிப்பு உள்ளிட்ட காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொண்டு வருகிறது. இச்சவால்களை எதிர்கொள்ளும் வகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கமானது, தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டம் (Sustain TN) எனும் முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் சார்ந்த இடர்பாடுகளுக்கு புதுமையான தீர்வுகள் வழங்குவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த முன்னெடுப்பு, தமிழ்நாடு மட்டுமின்றி நாட்டின் பிற பகுதிகளுக்கும் நிலையான மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய எதிர்காலத்தை உருவாக்கப் பங்களிப்பினை நல்கும்.

நம் மாநிலம் எதிர்கொள்ளும் முக்கிய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றச் சவால்களைச் சமாளிக்க, புதுமையான தீர்வுகளை உருவாக்குவதில் மாணவர்கள், தனிநபர்கள், குழுக்கள் மற்றும்

புத்தொழில் நிறுவனங்களை ஈடுபடுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளுடன் இணக்கமான நிலையான தீர்வுகளை உருவாக்க, புத்தொழில் முனைவோரின் ஆற்றலைப் பயன்படுத்துவதே இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கமாக உள்ளது.

அதனடிப்படையில், சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT–M), அறிவுசார் தோழமையாகக் கொண்டு, சுழல் பொருளாதாரம் (Circular Economy), புதுப்பிக்கத்தக்க ஆற்றல், விவசாயம் மற்றும் கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 10 திறன்மிக்க புத்தொழில் நிறுவனங்கள் தீவிரமான தேர்வுமுறை மூலம் அடையாளம் காணப்பட்டன. இந்நிறுவனங்களுக்கு முன்மாதிரி தயாரித்தல் (Prototype), சந்தை வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் வணிகத்தை விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டதுடன்

ரூ.10 லட்சம் மதிப்பிலான தொடக்க நிதியுதவியும் வழங்கப்பட்டது.

### 4.11. பசுமை நகரக் குறியீடு

பசுமை நகரக் குறியீடு எனும் இம்முன்னெடுப்பு, காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகளில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களின் செயல்பாடுகளையும் முறையாக மதிப்பிட்டு தரவரிசைப்படுத்துவதற்கான குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட விரிவான கட்டமைப்பாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக, இக்கட்டமைப்பை உள்ளடக்கிய அதிகாரப்பூர்வ தளமாக ஒரு இணையவழி தகவல் பலகை (Online Dashboard) உருவாக்கப்படும். இதன் மூலம் மாவட்டங்களிடையே ஆரோக்கியமான போட்டித்தன்மையுடன் கூடிய முன்னேற்றம், சூழலிருந்து கற்றுக்கொள்ளுதல் மற்றும் தேவைக்கேற்ப அரசின் ஆதரவு ஆகியவற்றுக்கான வலுவான, தரவு சார்ந்த அடித்தளம் அமைக்கப்படும்.

பசுமைக் காலநிலைக் குறியீட்டுக் கட்டமைப்பை உருவாக்குவதும் செயல்படுத்துவதும், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 30 குறியீடுகள் மற்றும் 7 பசுமைப் பிரிவுகளின் அடிப்படையில் அவற்றை மதிப்பிட்டு, ஒரு அளவிடக்கூடிய அடிப்படை நிலையை நிறுவ உதவும். தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களும், அவற்றின் பசுமை காலநிலைக் குறியீட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் மூன்று செயல்திறன் நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: அவை, ஆர்வலர்கள் (0 முதல் 40 வரை மதிப்பெண்கள்), கற்பவர்கள் (40 முதல் 60 வரை) மற்றும் முன்னணியினர் (60 முதல் 100 வரை). இந்த இணையவழித் தகவல் பலகையுடன் முன்மொழிவு உருவாக்கும் கருவி (Proposal Generator) மற்றும் உரையாடல் வழி வினவல் இடைமுகம் (Conversational Query Interface) போன்ற செயற்கை நுண்ணறிவு கருவிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

## 4.12. வெப்ப மீள்திறனுக்கான மையம்

தமிழ்நாடு அரசு வெப்பத்தை ஒரு பேரிடராக அறிவித்து, அரசுத் துறைகளின் பல்வேறு முன்னெடுப்புகள் மூலம் நகர்ப்புற வெப்பத் தீவு விளைவை (Urban heat island effect)க் குறைக்க தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்குச் சிறப்பு கவனம் செலுத்தி, மாநிலம் முழுவதும் வெப்பத் தணிப்பு மற்றும் செயலற்ற குளிரூட்டும் (Passive Cooling) உத்திகளை வடிவமைத்துச் செயல்படுத்துவதற்கான ஒரு சிறப்பு தளமாக, தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தின் கீழ் வெப்ப மீள்திறன் மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் அதன் தோழமைகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், ஒருங்கிணைந்த வெப்ப இடர் மேலாண்மை மற்றும் செயலற்ற குளிரூட்டப்

பரிந்துரைகளுக்கான மாநிலத்தின் ஒருங்கிணைப்பு நிறுவனமாக இந்த மையம் செயல்படுகிறது. இந்த ஒருங்கிணைவின் ஒரு பகுதியாக, குளிர் கூரைப் பூச்சுப் பயன்பாட்டிற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையை இம்மையம் உருவாக்கி வெளியிட்டுள்ளது. இது பொதுக் கட்டடங்கள் மற்றும் பள்ளிகளில் குளிர் கூரைகளைச் செயல்படுத்துவதற்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது. இதற்கிடையில், மாணவர்களுக்கு இதமான வெப்பச் சூழல் மற்றும் அறிவாற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, அரசுப் பள்ளிகளில் குளிர் கூரை (Cool Roof)த் திட்டத்தைச் செயல்படுத்த முன்மொழியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, குளிர்ச்சியூட்டும் கூரை தொழில்நுட்பத்தைச் செயல்படுத்த அம்பத்தூரில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒரு முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் முடிவுகளின்படி, அப்பள்ளியில் வெப்பநிலை 1.5°C முதல் 3°C வரை

குறைந்தது. மாணவர்களுக்கு இதமான வெப்பச் சூழல் மேம்பட்டதை இது உறுதிப்படுத்தியது. அடுத்த ஐந்து ஆண்டுகளில், இத்திட்டத்தை தமிழ்நாட்டின் பிற அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகக் கட்டடங்களுக்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம், குறைந்த உள்ளடக்க ஆற்றல் கொண்ட 15 செயலற்ற குளிரூட்டும் கட்டுமானப் பொருட்களை பொதுப்பணித் துறையின் விலைப் பட்டியலில் சேர்ப்பதற்காக அடையாளம் கண்டு பொதுப்பணித் துறைக்குச் சமர்ப்பித்துள்ளது. இதன் மூலம், அரசு கட்டுமானங்களில் காலநிலைக்கேற்ற பொருட்களைப் பரவலாகப் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் காலநிலை துணை வகைப்பாடுகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட செயலற்ற குளிரூட்டும் வழிகாட்டு நெறிமுறைகள், இம்மையத்தின் தலைமையில் தயாரிக்கப்பட்டு, அரசால் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது, எதிர்காலக்

கட்டட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களில் வெப்பத் தாங்குதிறனை ஒருங்கிணைப்பதற்காக, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கட்டமைப்பை வழங்குகிறது.

**5. கடலோர மண்டல மேலாண்மை**

இந்தியாவின் மொத்த கடற்கரை நீளத்தில் சுமார் 15 சதவீதத்தைக் கொண்ட தமிழ்நாடு, நாட்டின் முக்கியமான கடலோர மாநிலங்களில் ஒன்றாகும். சதுப்புநிலக் காடுகள், பவளப்பாறைகள், கடற்பாசிகள், கடற்புல் படுகைகள், உப்பு நிலங்கள், சேற்றுத் திடல்கள் மற்றும் மணல் தேரிகள் உள்ளிட்ட பல்வேறு கடலோர மற்றும் கடல்சார் சூழலமைப்புகளால் இம்மாநிலம் செழித்து விளங்குகிறது. இச்சூழலமைப்புகள், சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சிக்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்குகின்றன.

இக்கடலோர மற்றும் கடல்சார் வளங்களைப் பாதுகாத்து, நிலையான முறையில் மேலாண்மை

செய்வதற்கு, கடலோர செயல்முறைகள், கடற்கரை மேலாண்மை, கடல்சார் பேரிடர்கள், பாதிப்பிற்குள்ளாகும் தன்மையின் மதிப்பீடு மற்றும் சூழலமைப்பு அடிப்படையிலான மேலாண்மை போன்ற துறைகளில் அறிவியல், தொழில்நுட்ப மற்றும் நிறுவனத் திறன்களை வலுப்படுத்தும் ஒருங்கிணைந்த மற்றும் பன்முக அணுகுமுறை இன்றியமையாததாகும்.

கடல் மற்றும் கடலோரச் சூழலமைப்புகளைப் பாதுகாத்து, அவற்றின் நிலையான மேலாண்மையை வலியுறுத்தும் நிலைத்தகு வளர்ச்சி இலக்கு (SDG) – 14 : நீருக்கடியிலான வாழ்க்கை (Life below water) என்ற இலக்கை அடைய இத்துறை உறுதி கொண்டுள்ளது.

### 5.1. புவியியல் தகவல் அமைப்பு

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System) பிரிவு, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட அவசரகால சுனாமி மறுசீரமைப்புத்

திட்டத்தின் கீழ் 2011–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகள், 2011 மற்றும் 2019–இன் அடிப்படையில், நிலைத்தகு கடலோர மேலாண்மைக்கான தேசிய மையம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு நிறுவனம் ஆகியவற்றின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன், கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் மற்றும் உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றின் தயாரிப்பு மற்றும் செயலாக்கப் பணிகளுக்கு இப்பிரிவு சேவைகளை வழங்கியுள்ளது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்டுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகளை திறம்பட செயல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் புவியியல் தகவல் அமைப்பு

சார்ந்த ஆதரவினை, தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்திற்கு இப்பிரிவு வழங்கி வருகிறது. இப்பிரிவின் முக்கியப் பணிகளில், கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதிகளின் முன்தொழில்நுட்ப ஆய்வு, அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களில் கடற்கரைப் பகுதிகளின் வகைப்பாடு ஆய்வு, இணையதளப் பராமரிப்பு, கடலோர மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்துதல், பொதுமக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் நீலக்கொடி கடற்கரை மேம்பாட்டிற்கான தொழில்நுட்ப ஆதரவு வழங்குதல் ஆகியவை அடங்கும். மேலும், பசுமைப் படை (Green Squad) மேற்கொள்ளும் கடற்கரை ஒழுங்குமுறைப் பகுதிகளில் விதிமீறல்கள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு, அப்பகுதிகளில் கடற்கரை வகைபாட்டை அடையாளம் காணுதல், கள ஆய்வு மேற்கொள்ளுதல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய பணிகளில் தொழில்நுட்ப உதவி வழங்குவதுடன்,

கடலோர ஒழுங்குமுறை தொடர்பான வழக்குகளுக்கு தொழில்நுட்ப கருத்துரைகள் தயாரித்து வழங்குதல் மற்றும் கடலோர மேலாண்மையின் புவிசார் மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பாக அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் போன்ற முக்கியப் பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

### 5.2. கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம்

கடலோரப் பகுதிகளைப் பாதுகாத்து, அவற்றின் சூழலியல் வளங்களைப் பேணுவதுடன், கடலோரப் பகுதிகளில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டம், 1986–இன் விதிகளின் கீழ், இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 06.01.2011 அன்று S.O.19(E) என்ற அறிவிக்கையின் மூலம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2011 வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையின்படி, கடலோரப் பகுதிகள் பின்வரும் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–1 (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை மற்றும் அலையிடைப்பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–2 (வளர்ச்சியடைந்த பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–3 (வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் ஊரகப் பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–4 (கடல்நீர் பகுதியில் உயர் அலைக் கோட்டிலிருந்து நாட்டின் கடல் எல்லைப் பகுதிக்கு (12 நாட்டிகல் மைல்கள்) இடைப்பட்ட கடல் பகுதி மற்றும் அலை தாக்கமுள்ள நீர்நிலைப் பகுதிகள்)

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–5 (சிறப்புக் கவனம் செலுத்தி பாதுகாக்க வேண்டிய முக்கிய கடல் சூழல் பகுதிகள்)

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின்படி, ஒவ்வொரு கடலோர மாநிலமும் கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை தயாரிப்பது கட்டாயமாகும்.

அதன்படி, கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2011–ன் விதிகளுக்கு இணங்க, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கடலோர மாவட்டங்களுக்குமான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை தயாரிக்கும் பணியை, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான, சென்னை நிலைத்தகு கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்திடம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை ஒப்படைத்துள்ளது.

தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்திற்கு இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் 24.10.2018 அன்று ஒப்புதல் வழங்கியது. ஒப்புதல் பெறப்பட்ட 117 வரைபடங்களைக் கொண்ட கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டம், தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வரைபடங்களின் நகல்கள் அனைத்து மாவட்டக் கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்களுக்கும், தொடர்புடைய அரசுத் துறைகளுக்கும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் செயல்படுத்துவதற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை, 2011–க்கு மாற்றாக கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019–னை வெளியிட்டு, அதன்

விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப புதிய கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை தயாரிக்குமாறு அனைத்து கடலோர மாநிலங்களையும் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களையும் அறிவுறுத்தியது. அதன்படி, தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடங்களைத் தயாரிக்கும் பணியானது கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019–ன் விதிகளுக்கு ஏற்ப, 1:25000 அளவுகோலில், நிலைத்தகு கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 5.3. உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால், கடலோர பேரிடர் இடர் குறைப்புத் திட்டத்தின் கீழ், 1:4000 அளவில் உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடங்களைத் தயாரிப்பதற்கான நிதியுதவி வழங்கப்பட்டது. இப்பணி, அண்ணா பல்கலைக்கழகத்தின்

தொலையுணர்வு நிறுவனம் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடங்கள், கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தும் வகையில், அனைத்து கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள், தொடர்புடைய அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட இதர அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 5.4. கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையை செயல்படுத்துதல்

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் முக்கிய நோக்கம், கடலோரப் பகுதிகள், அவற்றின் தனித்துவமான சூழலமைப்புகள் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து பேணுவதுடன், அறிவியல் அடிப்படையிலான நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். மேலும், மீனவ சமூகம் மற்றும் கடலோரப் பகுதிகளைச் சார்ந்து

வாழும் பிற சமூகங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதையும் இவ்வறிவிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் விதிமுறைகள், தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம் மற்றும் மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 5.5. தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம்

கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், விதிமீறல்களைத் தடுக்கவும், இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், மாநில அளவில் தமிழ்நாடு கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமத்தினை அமைத்துள்ளது. இக்குழுமத்தின் தலைவராக தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்

துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் செயல்படுகிறார். சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் இயக்குநர் இக்குழுமத்தின் உறுப்பினர் செயலாளராக செயல்படுகிறார். இக்குழுமத்தில் பல்வேறு அரசு துறைகளின் மூத்த அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர். மேலும், இக்குழுமம், மாநில அளவிலான பரிந்துரை வழங்கும் அமைப்பாகச் செயல்பட்டு, திட்டத்தின் தன்மை மற்றும் அதிகார வரம்பிற்கு ஏற்ப, கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி வழங்குவதற்காக திட்ட விண்ணப்பங்களை இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் / தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிந்துரை செய்து வருகிறது.

### 5.6. மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம்

தமிழ்நாட்டிலுள்ள 14 கடலோர மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்டு மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாவட்ட குழுமங்கள், கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள வளர்ச்சித் திட்ட விண்ணப்பங்களை ஆய்வு செய்வதற்காக அவ்வப்போது கூட்டங்களை நடத்துகின்றன. மேலும், கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கையின் விதிமுறைகள் மற்றும் நடைமுறையில் உள்ள சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்து, தகுதியுடைய விண்ணப்பங்களை மேலாய்வு மற்றும் பரிசீலனைக்காக தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்திற்கு பரிந்துரை செய்து வருகின்றன.

## 5.7. கடலோர ஒழுங்குமுறை மண்டலம் தொடர்பான முன்னெடுப்புகள்

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையை வெளிப்படையான முறையில் செயல்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்திற்கு தனித்துவமான இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில், தலைவர், உறுப்பினர் செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு தனித்தனி உள்நுழைவு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதால், விண்ணப்பங்களை இணையவழியில் பெறுதல், ஆய்வு செய்தல், பரிசீலனை செய்தல் ஆகிய பணிகள் எளிதாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையை திறம்பட செயல்படுத்துவதற்கும் மற்றும் அதன் நடைமுறையை

வலுப்படுத்துவதற்கும், தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களிலும் மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்களுக்கென முறையே ஒரு உதவியாளர் பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி விண்ணப்பங்களுக்கான ஆய்வுக் கட்டணத்தை, வங்கி கேட்பு வரைவோலை முறைக்கு மாற்றாக, இணையவழி மின்னணு கட்டண முறையில் செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019 குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் பயனுள்ள செயல்பாட்டை உறுதி செய்வதற்கும், சென்னை, கடலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் பயிலரங்குகள் நடத்தப்பட்டன.

இப்பயிலரங்குகளில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த தொடர்புடைய துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**6. மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடு**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006–ன் கீழ், சுற்றுச்சூழலில் ஏற்படக்கூடிய தாக்கங்களின் அடிப்படையில், புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டங்களின் விரிவாக்கம் / மாற்றம் ஆகியவற்றிற்கு முன்கூட்டியே சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது கட்டாயமாகும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, அனைத்து திட்டங்களும் 'A' வகை மற்றும் 'B' வகை என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அறிவிக்கையின் அட்டவணையில் 'A' வகையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம்

மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட வேண்டும். 'B' வகை திட்டங்களுக்கு, திட்டத்தின் செயல்பாட்டின் தன்மை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளின் அடிப்படையில், மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து (SEIAA) சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட வேண்டும். மாசுபாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில், சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் அதிகாரம் கொண்ட மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தை அமைப்பதற்கான வழிவகை இவ்வறிவிக்கையில் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தற்போதைய 6-வது மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையமானது, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 06.03.2025 அன்று வெளியிடப்பட்ட S.O. எண் 1098(E) அறிவிக்கையின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், சுற்றுச்சூழல் அனுமதி கோரும் திட்ட முன்மொழிவுகளைப் பரிசீலனை செய்வதில் மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு உதவுதற்காக மாநில அளவிலான இரண்டு நிபுணர் மதிப்பீட்டு குழுக்கள் (SEAC) அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையமானது ஒரு தலைவர், ஒரு உறுப்பினர் செயலாளர் மற்றும் ஒரு உறுப்பினரைக் கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாநில அளவிலான நிபுணர் மதிப்பீட்டுக் குழுக்களில் முறையே ஒரு தலைவர், ஒரு உறுப்பினர் செயலாளர் மற்றும் ஏழு உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். இக்குழுக்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். இந்த மாநில அளவிலான நிபுணர் மதிப்பீட்டுக் குழுக்கள், திட்ட முன்மொழிவுகளை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006 மற்றும் அதன் தொடர்ச்சியான

திருத்தங்களின் சட்டப்பூர்வ விதிமுறைகளின்படி மதிப்பீடு செய்து, சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது தொடர்பாக முடிவெடுப்பதற்காக தங்களது பரிந்துரைகளை மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கின்றன.

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986–ன் கீழ் இந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஒன்றியப் பிரதேசத்திற்கும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான நிலைநிறுத்தப்பட்ட ஆணையம் (SAEIA) மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான நிலைநிறுத்தப்பட்டக் குழு (SCEIA) ஆகியவற்றை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. இவ்வமைப்புகள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006–ன் கீழ் 'B' வகை திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை மேற்கொள்கின்றன. மேலும், மாநில அல்லது ஒன்றியப் பிரதேச அளவில் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் /

மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் குழு அமைக்கப்படாத நிலையிலோ அல்லது அவை செயல்படாத நிலையிலோ, அவற்றிற்கு பதிலாக அதன் பணிகளை இவை மேற்கொள்கின்றன. இதனுடன், ஒன்றிய அரசால் ஒப்படைக்கப்படும் பிற பொறுப்புகளையும் அதிகபட்சம் ஆறு மாத காலத்திற்கு மேற்கொள்ளலாம். மேலும், இக்காலம் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்படலாம்.

**சுற்றுச்சூழல் அனுமதி கோப்புகளை கையாள்வதில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்புகள்**

- சுற்றுச்சூழல் அனுமதி கோப்புகளை பரிசீலிக்கும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில், சுற்றுச்சூழல் அனுமதி விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கு இந்திய அரசின் பரிவேஷ் இணையதளம் பயன்படுத்தப்படுகிறது. சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கான சராசரி கால அளவு 50 நாட்களாகும். இதன் மூலம், விரைவாக

சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது.

- சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான அனைத்து உள்நிலைச் செயல்முறைகள் மற்றும் கோப்புகளும் மின்–அலுவலக முறையின் வாயிலாக மட்டுமே கையாளப்படுகின்றன. தமிழ்நாடு மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சுற்றுச்சூழல் அனுமதி விண்ணப்பங்களின் அச்சுப் பிரதிகளை ஏற்றுக்கொள்வதில்லை. இதன் மூலம், சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் நடைமுறை முழுமையான காகிதமில்லா நடைமுறையாக மாற்றப்பட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு பங்களிப்பு செய்யப்படுகிறது.

- தமிழ்நாடு மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் மூலம், சுற்றுச்சூழல் அனுமதி விண்ணப்பங்களுக்கான

பரிசீலனைக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக, www.seiaa.tn.gov.in என்ற இணையதளத்தில், இணையவழி மின்னணு கட்டணம் செலுத்தும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், முன்னர் நடைமுறையிலிருந்த வரைவோலை வாயிலாக பரிசீலனைக் கட்டணம் செலுத்தும் நடைமுறை மாற்றப்பட்டு, தொழில் செய்வதை எளிதாக்குவதுடன், நேரடி அலுவல் தொடர்புகளும் குறைக்கப்பட்டுள்ளன.

- கோப்புகளை மின்–அலுவலக வாயிலாக கையாள்வதன் மூலம், வெளிப்படைத் தன்மையை மேலும் மேம்படுத்தியுள்ளது.

## 7. தமிழ்நாடு கடல்சார் வள அறக்கட்டளை

தமிழ்நாடு 1,068.69 கி.மீ. நீளமுடைய கடற்கரையைக் கொண்ட மாநிலமாகும். இங்கு, அலையாத்திக் காடுகள், பவளப்பாறைகள், கடற்புற்கள்,

சேற்றுச் சமவெளிகள், கழிமுகங்கள் மற்றும் மணல் திட்டுகள் உள்ளிட்ட சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மற்றும் கடலோரச் சூழலமைப்புகள் ஆகியவை உள்ளன. இச்சூழலமைப்புகள் கடலோரப் பாதுகாப்பு, பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு, கார்பன் சேமிப்பு மற்றும் கடலோர மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவு உள்ளிட்ட அத்தியாவசிய சூழலியல் சேவைகளை வழங்குகின்றன. எனினும், காலநிலை மாற்றம், வாழ்விடச் சீரழிவு, மாசுபாடு மற்றும் இயற்கை வளங்களின் நிலைத்தன்மையற்ற பயன்பாடு ஆகியவை இச்சூழலமைப்புகளின் நீண்டகால நலனுக்கும் மீள்திறனுக்கும் குறிப்பிடத்தக்க வகையில் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன.

தமிழ்நாடு கடல்சார் வள அறக்கட்டளையானது தமிழ்நாட்டின் கடல்சார் மற்றும் கடலோரச் சூழலமைப்புகளின் நீண்டகால சூழலியல் நலன், மீள்திறன் மற்றும் உற்பத்தித் திறனை உறுதி செய்வதோடு, கடலோர சமூகங்களின் காலநிலை

மீள்திறன், வாழ்வாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கடல்சார் மற்றும் கடலோரச் சூழலமைப்புகளைப் பாதுகாத்தல், மீட்டெடுத்தல் மற்றும் நிலையான முறையில் மேலாண்மை செய்தல், அறிவியல் ஆய்வுகளை ஊக்குவித்தல், சூழலமைப்புகளின் மீட்டுருவாக்கம், நிலைத்தகு வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இவ்வறக்கட்டளையின் நோக்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கடல்சார் வள அறக்கட்டளை அறிவியல் ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் அறிவு மேலாண்மையை வலுப்படுத்தும் திட்டங்களை செயல்படுத்துவதுடன், கடல்சார் சூழலமைப்புகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசுத் துறைகள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில்துறைகள் மற்றும் சமூக அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து

செயல்படுகிறது. மேலும், அரசுத் திட்டங்கள், நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு, நிறுவனங்களின் சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் நிதி ஆதாரங்களைத் திரட்டி, முன்னுரிமைத் திட்டங்களை செயல்படுத்துகிறது. கூடுதலாக, புதுமையான நீலப் பொருளாதார முயற்சிகள், இயற்கைக் கல்வி, சூழலியல் சுற்றுலா, கடல்சார் மற்றும் கடலோரப் பாதுகாப்பு குறித்த பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஊக்குவித்து வருகிறது.

## 8. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய நதிகள் தூய்மைப்படுத்தும் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்தவும், அவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் தமிழ்நாடு

சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை 2002–ஆம் ஆண்டு, ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது.

தற்போது, மாநிலம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தகு வளர்ச்சி தொடர்பான திட்டங்களை ஒருங்கிணைத்தல், நிதியுதவி வழங்குதல், கண்காணிப்பு மற்றும் செயலாக்கத்தினை எளிதாக்குதல் ஆகிய பணிகளில் முக்கியப் பங்காற்றும் நிறுவனமாக இம்முகமை உருவெடுத்துள்ளது. நிறுவனங்களின் சுற்றுச்சூழல் பொறுப்பு நிதி மற்றும் பிற அரசுத் திட்டங்களின் மூலம், அரசு துறைகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் பிற செயல்படுத்தும் முகமைகளுடன் ஒருங்கிணைந்து, சுற்றுச்சூழல் திட்டங்களை திறம்படத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை, ஒருங்கிணைப்பையும் ஆதரவையும் வழங்கி வருகிறது.

நீர்நிலைகள் புனரமைப்பு, பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு, காலநிலை மீள்திறன் மேம்பாடு, சூழலியல் பூங்காக்கள் அமைத்தல், சுற்றுச்சூழல் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைச் செயல்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளுக்கு இம்முகமை ஆதரவு நல்கி வருகிறது. மேற்கூறிய திட்டங்கள்யாவும், தொடர்புடைய அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையின் தொழில்நுட்ப ஆதரவுடனும் சூழலமைப்புகளின் மீட்பு மற்றும் நிலைத்தகு சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றை முன்னிறுத்தி செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 9. காலநிலை அரங்கம்

மாநிலத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வு, மாதிரியாக்கம் (Climate Modelling) மற்றும் தகவமைப்பு திட்டமிடலை வலுப்படுத்தும் நோக்கில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையால்,

அண்ணா பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையம் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தில், காலநிலை மாதிரியாக்கத்திற்காக (Climate Modelling) அதிநவீன உயர் செயல்திறன் கணினி வசதியுடன் கூடிய காலநிலை அரங்கம் (Climate Studio) அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கம், தமிழ்நாட்டிற்கான உயர்துல்லிய, நில அளவை அடிப்படையிலான காலநிலை நிகழ்வுக் காட்சிகளை உருவாக்குவதையும், வேளாண்மை, நீர்வளங்கள், வனங்கள், பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் கடலோரச் சூழலமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் தன்மையை மதிப்பீடு செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், மேம்பட்ட காலநிலை மற்றும் தாக்க மதிப்பீட்டு மாதிரிகளை பயன்படுத்தி, துறைவாரியான புவிசார் தகவல்களை உருவாக்கும் பணியையும்

மேற்கொள்கிறது. மேலும், கொள்கை வகுப்பாளர்கள், ஆய்வாளர்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடையே காலநிலை மாற்றம் தொடர்பான அறிவு, அறிவியல் தகவல்கள் மற்றும் ஆய்வு முடிவுகளைப் பரப்புவதற்கான ஒருங்கிணைந்த அறிவுத் தளமாகவும் இம்மையம் செயல்படுகிறது.

காலநிலை அரங்கம், அரசு துறைகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு காலநிலை மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் தன்மை தொடர்பான தரவுகளை வழங்குவதன் மூலம், ஆதாரப்பூர்வமான திட்டமிடலுக்கு உறுதுணையாக விளங்குகிறது. மேலும், காலநிலை தாக்க மதிப்பீடு தொடர்பான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வதுடன், காலநிலை முன்னறிவிப்புகளை உருவாக்குதல் மற்றும் காலநிலை அறிவியல் துறையில், அறிவியல் ஆராய்ச்சித் திறன்களை வலுப்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கிறது. இதனுடன், தேசிய மற்றும் பன்னாட்டு காலநிலை ஆராய்ச்சி நிறுவனங்களுடன்

தரவுப் பகிர்வு மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை ஊக்குவிப்பதுடன், காலநிலை தரவுத்தளங்களை தொடர்ந்து புதுப்பித்தல் மற்றும் இணையவழித் தளங்கள் மூலம் பொதுமக்களுக்கு காலநிலை தகவல்களை எளிதில் அணுகக்கூடிய வகையில் மேம்படுத்துதல் போன்ற பணிகளையும் இம்மையம் மேற்கொண்டு வருகிறது. மேலும், இக்காலநிலை அரங்கம், மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களின் காலநிலை மாற்ற செயல் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு தரவுப் பங்குதாரராகவும், அறிவுப் பங்குதாரராகவும் செயல்பட்டு வருகிறது.

## 10. நீலக்கொடி கடற்கரைச் சான்றிதழ் திட்டம்

நீலக்கொடி கடற்கரைச் சான்றிதழ் திட்டம் என்பது டென்மார்க்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளையால் வழங்கப்படும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தரச்சான்றாகும். சுற்றுச்சூழல் மேலாண்மை, குளியல் நீரின் தரம், சுற்றுச்சூழல் கல்வி, பாதுகாப்பு மற்றும்

பார்வையாளர்களுக்கான வசதிகள் ஆகிய துறைகளில் சிறப்பாக செயல்படும் கடற்கரைகளுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. மொத்தம் 33 கடுமையான தரக்கட்டுப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் கடற்கரைகளுக்கு மட்டுமே இச்சான்றிதழ் வழங்கப்படுவதால், இது உலகின் மிக உயரிய சுற்றுச்சூழல் தரச்சான்றுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான துறையாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை செயல்பட்டு வருகிறது. இத்திட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், நகராட்சிகள் மற்றும் பிற தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை மெரினா கடற்கரை, கடலூர் சில்வர் கடற்கரை, நாகப்பட்டினம் காமேஸ்வரம் கடற்கரை மற்றும் இராமநாதபுரம் அரியமான் கடற்கரை ஆகிய இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தின் கீழ், சென்னை மாவட்டம் பாலவாக்கம், திருவான்மியூர் மற்றும் உத்தண்டி, கடலூர் மாவட்டம் சாமியார்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் கீழ்புதுப்பட்டு மற்றும் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் ஆகிய கடற்கரைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடலோரச் சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்தல், கடலோர மற்றும் கடல்சார் சூழலமைப்புகளைப் பாதுகாத்தல், பாதுகாப்பான மற்றும் குளியல் நீரின் தரத்தை உறுதி செய்தல், நிலைத்தகு சுற்றுலாவை ஊக்குவித்தல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை

வலுப்படுத்தல், பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தல், கடலோர மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் சர்வதேச தரநிலைகளுக்கேற்ப தமிழ்நாட்டை நிலைத்தகு கடலோர மேலாண்மைக்கான முன்னோடி மாநிலமாக உருவாக்குதல் ஆகியவை நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

### 11. சுற்றுச்சூழல் கல்வித் திட்டம்

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், சுற்றுச்சூழல் கல்வி, விழிப்புணர்வு, ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வலுப்படுத்தவும், நிலைத்தகு வாழ்வியல் நடைமுறைகளை ஊக்குவிக்கவும் சுற்றுச்சூழல் கல்வித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மேலும், சுற்றுச்சூழல் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் தமிழ்நாட்டின் விரிவான

பங்களிப்பை வெளிப்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 9,500 பள்ளிகள், தமது சூழல் மன்றங்களை சுற்றுச்சூழல் கல்வி திட்ட இணையதளத்தில் பதிவு செய்துள்ளன. இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 45 பள்ளிகளை உள்ளடக்கிய சுமார் 1,700 சுற்றுச்சூழல் மன்றங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியின் ஆதரவுடன் சூழல் மன்றங்கள் மூலம் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்களிடையே சூழல் அமைப்புகள் மற்றும் பல்லூயிரியப் பாதுகாப்பு குறித்த அறிவினை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் இயற்கை முகாம்கள், பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான களப் பயணங்கள், இயற்கை நடைப்பயணங்கள், பறவைகள் காணும் நிகழ்ச்சிகள், தலைமுறைகளுக்கிடையேயான பசுமை உரையாடல்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள், போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல், கழிவு மேலாண்மை,

மறுசுழற்சி நடவடிக்கைகள் மற்றும் தூய்மைப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு அனுபவம் சார்ந்த கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 12. நிறைவுரை

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற நடவடிக்கைகளில் முன்னோடித் துறையாக விளங்கி, வலுவான தலைமையையும் உறுதியான அர்ப்பணிப்பையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. தனித்துவமான திட்டங்கள், புதுமையான செயல்திட்டங்கள், திறன் மேம்பாடு மற்றும் அடித்தட்டு மக்களின் பங்கேற்பு நடவடிக்கைகள் மூலம், காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறன் மிக்க, நிலையான மற்றும் சமத்துவமான எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளத்தை இந்த அரசு அமைத்துள்ளது. இக்குறிப்பில் இடம்பெற்றுள்ள

சாதனைகள், அரசு துறைகள், உள்ளூர் சமூகங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் குடிமைச் சமூக அமைப்புகள் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் விளைவாக உருவானவை. இவை அனைத்தும் பசுமைமிக்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான தமிழ்நாட்டை உருவாக்கும் பொதுவான இலக்கை நோக்கி முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இயற்கைச் சூழலமைப்புகளைப் பாதுகாத்தல், காலநிலை விழிப்புணர்வை மேம்படுத்தல், இயற்கை சார்ந்த தீர்வுகளை ஊக்குவித்தல், மாவட்டங்களையும் உள்ளூர் சமூகங்களையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் பொறுப்புணர்வுள்ள பங்குதாரர்களாக வலுப்படுத்துதல் ஆகியவற்றில் தனது அர்ப்பணிப்பை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. தொடர்ச்சியான கவனம், துறைசார் ஒருங்கிணைப்பு மற்றும் புதுமையான அணுகுமுறைகளின்

மூலம், எதிர்கால சந்ததியினருக்காக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் மிக்க, வளமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதில் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

*"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்"*

**திருக்குறள் – 742**

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உடையதே அரண் ஆகும்.

### 1. முன்னுரை

நம் சுற்றுச்சூழல், பூமியில் உள்ள அனைத்து உயிர்களும் நிலைத்திருப்பதற்கான அடிப்படையாக திகழ்கிறது. மனிதநலன், பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நல்வாழ்வு ஆகிய அனைத்தும் சுற்றுச்சூழலோடு நெருங்கிய தொடர்புடையவையாகும். நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், பயன்படுத்தும் நிலம் மற்றும் வாழ்வை நிலைநிறுத்தும் இயற்கை அமைப்புகள் இவ்வனைத்தும் சுற்றுச்சூழலின் அங்கங்களாகும். மக்களின் வாழ்வின் தரத்தை

மேம்படுத்தி, நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும், வருங்காலத் தலைமுறைகளுக்கான இயற்கை வளங்களைப் பாதுகாக்க சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் இன்றியமையாததாகும்.

சமீப காலங்களில், விரைவான தொழில்மயமாதல், நகர்ப்புற விரிவாக்கம், இயற்கை வளங்களின் அதிகப்படியான பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை சுற்றுச்சூழல் அமைப்புகளின் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. மாசுபாடு, கழிவு உருவாக்கம், இயற்கை வளங்களின் சீரழிவு மற்றும் காலநிலை மாற்றம் போன்றவை உடனடி மற்றும் நீடித்த கவனம் தேவைப்படும் முக்கிய சவால்களாக உருப்பெற்றுள்ளன. இச்சவால்களை எதிர்கொள்வதற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் சமநிலையான அணுகுமுறை அவசியமாகிறது.

எனவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் அடிப்படைப் பொறுப்பாகவும், நிலையான வளர்ச்சியின் முக்கிய அங்கமாகவும் விளங்குகிறது. மாசுபாட்டைத் தடுப்பது, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்கொள்வது, இயற்கை வளங்களைச் சிக்கனமாகவும், திறமையாகவும் பயன்படுத்துவதை ஊக்குவிப்பது மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்வது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் கீழ் அடங்குகின்றன. திறன்மிக்க கொள்கைகள், ஒழுங்குமுறை நடவடிக்கைகள், அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மக்களின் பங்கேற்பு ஆகியவற்றின் மூலம் தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் நிலைத்த எதிர்காலத்தை உருவாக்குவதே சுற்றுச்சூழல் பாதுகாப்பின் உயர்ந்த நோக்கமாகும்.

மாநிலத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை செயல்படுத்தும் சட்டப்பூர்வ

அமைப்பாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில், தலைவர், உறுப்பினர் செயலர், மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஐந்து அலுவல் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து உறுப்பினர்கள், விவசாயம், மீன்வளம், தொழில், வர்த்தகம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் மாநில அரசின் நிறுவனங்கள் அல்லது கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு உறுப்பினர்கள் என மொத்தம் 17 உறுப்பினர்கள் உள்ளனர்.

## 2. வாரியத்தின் பணிகள்

- மாநிலத்தில் நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும்

மற்றும் குறைக்கவும் விரிவான திட்டங்களைத் திட்டமிடுதல்.

- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான தகவல்களை பகிர்தல்.
- நீர் மாசுபாடு மற்றும் நீர் மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான விசாரணைகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பது, நடத்துவது மற்றும் பங்கேற்பது.
- அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அவற்றின் செயல்திறனுக்காக ஆய்வு

செய்தல் மற்றும் திட்டங்களை மறுபரிசீலனை செய்தல், திருத்த நடவடிக்கைகளுக்கான விவரக்குறிப்புகள் தயாரித்தல்.

- தொழிற்சாலை அல்லது உற்பத்தி செயல்முறை ஆகியவற்றை ஆய்வு செய்து ஏதேனும் மாசு கட்டுப்பாட்டு சாதனங்களை பொருத்தி காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான வழிமுறைகளை வழங்குதல்.

- காற்று மாசு கட்டுப்பாடு பகுதிகளை காற்றின் தரத்தை மதிப்பிடும் நோக்கத்திற்காக ஆய்வு செய்தல் மற்றும் அத்தகைய பகுதிகளில் காற்று மாசுபாட்டைத் தடுக்க, கட்டுப்படுத்த அல்லது குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

- மாநில அரசு அல்லது ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பரிந்துரைக்கப்படும் பிற செயல்பாடுகளைச் செய்தல்.

3. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் திறம்பட செயல்படுவதற்கு மூன்று அடுக்கு நிர்வாக அமைப்பைக் கொண்ட, சென்னையில் உள்ள தலைமை அலுவலகம், 9 மண்டல அலுவலகங்கள் மற்றும் 44 மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் உள்ளது. மேலும், தொழிற்துறை மையங்களில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், மாநில எல்லைப் பகுதிகளில் கழிவுகள் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படுவதையும், கொட்டப்படுவதையும், கண்காணிப்பதற்கும் சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் 12 பறக்கும் படை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதனுடன், அதிக தொழில்துறை செயல்பாடுகள் மற்றும் மாசு ஏற்படும் பகுதிகளாகக் கருதப்படும் பல்லாவரம் மற்றும் மேட்டூர் பகுதிகளில், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கண்காணிப்பு முறைமையின் பகுதியாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நீர் மாதிரிகள், கழிவுநீர் மாதிரிகள் மற்றும் புகை வெளியேற்றத்தை ஆய்வு செய்ய, தலைமையகம் உட்பட 18 இடங்களில் சுற்றுச்சூழல் ஆய்வகங்களை மாநிலத்தில் நிறுவியுள்ளது. வாரியத்தின் அமைப்பு பின்வருமாறு.



## 4. இசைவாணை செயல்முறை

### 4.1. தொழிற்சாலைகளின் வகைப்பாடு

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் திருத்தியமைக்கப்பட்ட தொழிற்சாலை வகைப்பாட்டு முறைமை 2025–இன் கீழ், தொழிற்சாலைகள் அவற்றின் மாசு குறியீடு மதிப்பெண் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை, நீலம் மற்றும் வெள்ளை என ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில், நீல வகை தொழிற்சாலைகள் மாசு கட்டுப்பாடு, கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்த அத்தியாவசிய சுற்றுச்சூழல் சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு பொருந்தும். அபாயகரமான அல்லது தொற்றுக் கழிவுகளை உருவாக்காத தொழிற்சாலைகள் இந்நிறுவனங்களுக்கான மாசு குறியீடு மற்றும் செயல்படுவதற்கான இசைவாணை தொடர்பான விதிமுறைகள் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படியே தொடரும். மேலும், ஊக்கத்தொகை நடவடிக்கையாக, தொடர்புடைய மாசு

குறியீடு வகைக்கு நிர்ணயிக்கப்பட்ட இசைவாணை செல்லுபடியாகும் காலத்துடன் கூடுதலாக *2* ஆண்டுகள் வழங்கப்படும்.

மேலும், இத்தொழிற்சாலைகள் கண்காணிப்பு காரணங்களுக்காக அவற்றின் மாசு குறியீடு மதிப்பு மற்றும் மொத்த நிலையான சொத்து மதிப்பின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

<table>
<tr><th rowspan="2">மொத்த நிலையான சொத்துக்களின் அடிப்படையிலான வகைப்பாடு</th><th rowspan="2">மொத்த நிலையான சொத்துக்கள் (ரூபாய் கோடியில்)</th><th colspan="4">மாசுபடுத்தும் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு</th></tr>
<tr><th>சிவப்பு</th><th>ஆரஞ்சு</th><th>பச்சை</th><th>வெள்ளை</th></tr>
<tr><td>பெரிய வகை</td><td>$> 10$</td><td rowspan="3">அதிக மாசுபாடு</td><td rowspan="3">நடுத்தர மாசுபாடு</td><td rowspan="3">குறைவான மாசுபாடு</td><td rowspan="3">மிகக் குறைவான மாசுபாடு</td></tr>
<tr><td>நடுத்தர வகை</td><td>5 – 10</td></tr>
<tr><td>சிறிய வகை</td><td>$\leq 5$</td></tr>
<tr><td colspan="2">மாசு குறியீடு மதிப்பு</td><td>$\geq 80$</td><td>55–79</td><td>25–54</td><td>$< 25$</td></tr>
</table>

அதிக நிலையான சொத்து மதிப்பு மற்றும் அதிக மாசுபடுத்தும் திறன் கொண்ட தொழிற்சாலைகள், அவற்றிற்கேற்ப வகைப்படுத்தப்படுகின்றன. இதில்,

வெள்ளை வகை தொழிற்சாலைகள் மிகவும் குறைந்த அளவில் மாசுபடுத்துபவையாகக் கருதப்படுவதால், அவை வாரியத்திடமிருந்து இசைவாணை பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவ்வகை தொழிற்சாலைகள் செயல்படுவதற்கு வாரியத்திடம் தகவல் தெரிவிப்பது மட்டும் போதுமானதாகும். சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகள் இசைவாணை நடைமுறையின் கீழ் வருவதுடன், வாரியத்தின் ஒழுங்குமுறை கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்படுகின்றன. கண்காணிக்கப்படும் தொழிற்சாலைகளின் விபரங்கள் இணைப்பு – I – ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.2. இசைவாணை வழங்குவதற்கான நிபந்தனைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் தொழிற்சாலைகளின் உற்பத்தி மற்றும் கழிவுகளை சுத்திகரிப்பதற்கு தேவையான உள்கட்டமைப்புகள், இயந்திரங்கள் மற்றும் கண்காணிப்பு சாதனங்களை அமைப்பதற்கு, நிறுவுவதற்கான இசைவாணை

(CTE) வழங்கப்படுகிறது. இவ்விசைவாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் இணக்கத்தினை உறுதிசெய்த பிறகு, தொழிற்சாலைகளுக்கு இயங்குவதற்கான இசைவாணை (CTO) வழங்கப்படுகிறது.

எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின் கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 2021–22–ஆம் ஆண்டு முதல், சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5, 10 மற்றும் 14 ஆண்டுகள் செல்லுபடியாகும் வகையில், இயங்குவதற்கான இசைவாணை மற்றும் அதன் புதுப்பித்தலை தொகுப்பு இசைவாணையாக வழங்கி வருகிறது. மேலும் வாரியம், தொழில்துறை பயன்பாட்டு மண்டலம் அல்லது தொழிற்பேட்டையில் அமைந்துள்ள பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான இசைவாணை பெறுவதிலிருந்து விலக்கு அளித்து, நேரடியாக இயக்குவதற்கான இசைவாணையை வழங்கி வருகிறது.

### 4.3. இணையவழி மூலம் இசைவாணை வழங்குதல்

இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு இணைய முகப்பலகையின் மூலம் வாரியமானது, 19.01.2015 அன்று முதல் இசைவாணையை வழங்கி வருகிறது. இந்நடைமுறை, விண்ணப்பங்களை விரைவாகவும் எளிமையாகவும் பரிசீலனை செய்வதற்கும், கண்காணிப்பு செயல்முறையை மேம்படுத்துவதற்கும், இசைவாணை வழங்கும் நடைமுறையை மேலும் திறனுள்ளதாக மாற்றுவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பல்வேறு வகையான தொழிற்சாலைகளுக்கான இசைவாணையை விரைவாக வழங்குவதற்காக, தொழில்நுட்ப துணை குழு, இசைவாணை அனுமதி குழு, மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழு மற்றும் மாவட்ட இசைவாணை அனுமதி குழு போன்ற பல்வேறு குழுக்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வெவ்வேறு நிலைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

வாரியமானது, நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை தவிர, தீங்கு விளைவிக்கும் கழிவுகள், மருத்துவ கழிவுகள் மற்றும் திடக்கழிவுகள் மேலாண்மை செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகிறது.

## 4.4. தானியங்கு இசைவாணை

வாரியம், சிறிய சிவப்பு வகை மற்றும் அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு தானியங்கு புதுப்பித்தல் இசைவாணை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, தொழிற்சாலைகளின் சுய சான்றிதழ்கள் பெற்ற 7 நாட்களுக்குள் ஆய்வுகளின்றி இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது.

01.04.2025 முதல் 31.03.2026 வரை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட நிறுவுதல், இயக்குதல் மற்றும் புதுப்பித்தலுக்கான இசைவாணை விபரங்கள் இணைப்பு – II – ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 5. சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலி தர கண்காணிப்பு

சுற்றுச்சூழலின் நிலைமைகளை மதிப்பிடுவதற்கும், கொள்கை உருவாக்கம் மற்றும் செயலாக்கத்திற்கும் சுற்றுச்சூழல் தரக் கண்காணிப்பு மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவை இன்றியமையாததாகும். நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு)ச் சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு)ச் சட்டம், 1981 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள ஆணையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் திட்டங்கள் மூலம் நீர், காற்று மற்றும் ஒலி ஆகியவற்றின் தரத்தை கண்காணித்து வருகிறது.

### 5.1. ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் ரூ.1.50 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம், இந்தியாவிலேயே

முதன்முறையாக நிறுவப்பட்ட கண்காணிப்பு மையமாகும். தமிழ்நாடு முழுவதும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வையை நிகழ்நேர அடிப்படையில் மேற்கொள்ளும் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு மையமாக இது செயல்படுகிறது.

இம்மையத்தில், இணையவழி தொடர் உமிழ்வு / கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு, தொடர் சுற்றுப்புறக் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்கள், ஆற்று நீர்தரக் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் வாரியத்தின் பல்வேறு பயன்பாடுகளிலிருந்து பெறப்படும் தரவுகள் உயர் தெளிவுத்திறன் கொண்ட காட்சித் திரை அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டு, நிகழ்நேர கண்காணிப்பிற்கும் முடிவெடுப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றன. தொழிற்சாலைகளின் உமிழ்வு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரம், சுற்றுப்புறக் காற்றின் தரம் மற்றும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறன் ஆகியவை

இம்மையத்தின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. கண்காணிக்கப்படும் அளவுருக்கள் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளை மீறும்போதெல்லாம், இது தொழிற்சாலைகளுக்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட அதிகாரிகளுக்கும் தானியங்கி முறையில் எச்சரிக்கைகளை அனுப்புகிறது.

மேலும், இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு, குறைதீர்ப்பு அமைப்பு, சட்ட வழக்குகள் மேலாண்மை அமைப்பு, ஆய்வகத் தகவல் மேலாண்மை அமைப்பு, அபாயகரமான கழிவுகள் மற்றும் உயிரி மருத்துவக் கழிவுகள் எடுத்துச் செல்லும் வாகனங்களின் கண்காணிப்பு அமைப்புகள், குறுங்காடுகள் கண்காணிப்பு உள்ளிட்ட வாரியத்தின் முக்கிய பயன்பாட்டு அமைப்புகளும் இம்மையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனுடன், நிகழ் நேர காற்றுத் தரக் குறியீடு, இசைவாணை விண்ணப்பங்களின் கண்காணிப்பு மற்றும் சட்ட

வழக்குகள் தொடர்பான தகவல்கள் கண்காணிக்கப்படுகின்றன. இவ்வாறு, பல்வேறு சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறை செயல்பாடுகளை ஒரே தளத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம், இம்மையம் சுற்றுச்சூழல் விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதோடு, அமலாக்க நடவடிக்கைகளையும் தரவுகளின் அடிப்படையிலான சுற்றுச்சூழல் நிர்வாகத்தையும் வலுப்படுத்தி, தூய்மையான மற்றும் பாதுகாப்பான தமிழ்நாட்டை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

### 5.2. நீர் மாசு கண்காணிப்பு முறைகள்

அதிக அளவு மாசுபடுத்தும் 17 வகை தொழிற்சாலைகள் மற்றும் சிவப்பு வகையைச் சேர்ந்த பெரிய தொழிற்சாலைகள் அனைத்தும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மீண்டும் உற்பத்திச் செயல்முறைக்கே பயன்படுத்தும் வகையில், பூஜ்ஜிய திரவ வெளியேற்ற அமைப்பை நிறுவ வேண்டும். இம்முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன்

சேர்த்து, எதிர்மறை சவ்வூடுபரவல், பல்லடுக்கு ஆவியாக்கி மற்றும் கிளர்வுறுத்தப்படும் மெல்லிய படல உலர்த்தி அல்லது உயர் நிலையில் அமைக்கப்பட்ட சூரிய ஆவியாக்கும் கலன்கள் ஆகிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

வாரியம், தொழிற்சாலை சுத்திகரிப்பு அமைப்புகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அன்றாடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவைகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது. மேலும், அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் ஆகியவை நிலம், நீர்நிலைகள் மற்றும் கடலில் வெளியேற்றப்படுவதற்கு முன்னர், வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவிற்குள் சுத்திகரிக்கப்படுவதையும் கண்காணிக்கிறது.

### 5.3. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில், சிறுதொழில் குழுமங்களின் கழிவுநீர் சுத்திகரிப்புக்கு உதவும் வகையில் பல்வேறு

தொழில் துறைகளுக்காகப் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள், துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள், மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள், உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் மற்றும் மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவை இதில் அடங்கும். மாநிலத்தில் மொத்தம் 37 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | தொழிற்சாலை வகை | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 |
| 2 | துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 19 |
| 3 | மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள் | 3 |
| 4 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 |
| 5 | மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை | 1 |
| | **மொத்தம்** | **37** |

## 5.4. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் கசிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில், நாளொன்றுக்கு 2000 கிலோலிட்டர் திறன் கொண்ட, பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு முறையுடன் கூடிய கசிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கு அரசு ரூ.40 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சிப்காட் மற்றும் சிப்காட் தொழில் வளாகத்தில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளின் நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 23.12.2025 அன்று நிறுவுவதற்கான இசைவாணையை வழங்கியுள்ளது.

## 5.5. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய நிலை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிறுவப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சிவப்பு வகை தொழிற்சாலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இந்நிலையங்கள் நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயங்குவதற்கான இசைவாணை பெறுவது கட்டாயமாகும். தற்போது தமிழ்நாட்டில், மொத்தம் நாளொன்றுக்கு 2608 மில்லியன்லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட 129 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 100 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இயங்குவதற்கான இசைவாணை மற்றும் 29 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு நிறுவுவதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளன.

கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த, அனைத்து பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் இணையவழி தொடர் கழிவுநீர் தரக் கண்காணிப்பு அமைப்பு நிறுவவும், செயல்பாட்டிலுள்ள வசதிகளை திறம்பட கண்காணிப்பதற்காக கைப்பேசி செயலியை பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

**5.6. நீர்நிலைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்**

வாரியமானது, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, பேரூராட்சி ஆணையரகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றிற்கு, பாதாள சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்புகளை விரைவாக நிறைவு செய்யவும், ஆறுகள் மற்றும் பிற நீர்நிலைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றப்படுவதைத் தடுக்கவும்

அறிவுறுத்தியுள்ளது. மேலும், வாரியத்தின் இசைவாணையுடன் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி இயக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வறிவுறுத்தல்களைப் பின்பற்றாத உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படுகிறது. மேலும், நீர்நிலைகளில் கழிவுநீரை கொண்டு சென்று முறைகேடாக வெளியேற்றும் டேங்கர் லாரிகளின் வாகனப் பதிவை ரத்து செய்ய போக்குவரத்துத் துறைக்கு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, 2025–2026–ஆம் ஆண்டில், இவ்விதிமீறலில் ஈடுபட்ட 12 லாரிகளின் பதிவை ரத்து செய்ய வாரியம் பரிந்துரை செய்துள்ளது. மேலும், கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றும் பணியில் பயன்படுத்தப்படும் டேங்கர் லாரிகளில் உலகளாவிய இருப்பிட அமைப்புடன் (GPS) கூடிய இலக்கமுறை பூட்டு அமைப்பை நிறுவுமாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 5.7. ஆய்வகங்கள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் அதன் பல்வேறு நிதி உதவி பெற்ற திட்டங்களின் பகுதியாக, 8 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள், 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் என மாநிலம் முழுவதும் 18 சுற்றுச்சூழல் ஆய்வகங்களை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிறுவி, நீர், காற்று மற்றும் ஒலி அளவீடுகளை கண்காணித்து வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. மேலும், அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களிலும் அவ்வங்கீகாரம் பெறுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. வாரியத்தின் அனைத்து மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களிலும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு

மேம்படுத்தப்பட்டு, அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களிலும் அப்பிரிவை நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, தற்போது மொத்த கோலிஃபார்ம்கள் மற்றும் மலக்கழிவு சார்ந்த கோலிஃபார்ம் போன்ற நுண்ணுயிரியல் அளவுருக்கள், வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

## 5.8. நீர்நிலைகள் கண்காணிப்பு

### 5.8.1. தேசிய நீர்தர கண்காணிப்புத் திட்டம்

தேசிய நீர்தர கண்காணிப்புத் திட்டத்தின் கீழ், 70% வாரிய நிதி மற்றும் 30% ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதியுடன் தமிழ்நாடு முழுவதும் 178 கண்காணிப்பு நிலையங்கள் மூலம் உள்நாட்டு நீர்நிலைகளின் நீர்தரம் வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீராதாரங்கள், கடல் நீர், கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையங்கள், வடிகால்கள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் 20 ராம்சார் தளங்களில் இருந்து மாதாந்திர அல்லது அரையாண்டு அடிப்படையில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, நீர்தர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. கடல்நீர், ஆறுகள், ஏரிகள் மற்றும் நிலத்தடி நீரின் நீர்தர கண்காணிப்பு முடிவுகள், பொதுமக்களின் பார்வைக்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளங்களில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. கண்காணிப்பு நிலையங்களின் விபரங்கள் இணைப்பு – III – ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 5.8.2. மாசடைந்த ஆற்றுப் பகுதிகள்

தேசிய நீர்தர கண்காணிப்புத் திட்டத்தின் தரவுகளின் அடிப்படையில், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், 2025–ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 296 ஆற்றுப் பகுதிகளை மாசடைந்த ஆற்றுப் பகுதிகளாக அறிவித்துள்ளது. அவற்றில் தமிழ்நாட்டில்

9 ஆற்றுப் பகுதிகள் இவ்வகையின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஆற்றுப் பகுதிகள், உயிர்வேதியியல் ஆக்சிஜன் தேவை மதிப்புகளின் அடிப்படையில் ஐந்து முன்னுரிமை நிலைகளாக பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண். | முன்னுரிமை வகுப்பு | உயிர்வேதியியல் ஆக்சிஜன் தேவை (மி.கி/லி) |
|---|---|---|
| 1 | I | > 30 |
| 2 | II | 20 – 30 |
| 3 | III | 10 – 20 |
| 4 | IV | 6 – 10 |
| 5 | V | 3 – 6 |

அடையாளம் காணப்பட்ட 9 ஆற்றுப் பகுதிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | ஆற்றின் பெயர் | ஆற்றின் நீளம் (கி.மீ) | மாசுபட்ட ஆற்றின் பகுதிகள் | முன்னுரிமை வருடம் 2022 |
|---|---|---|---|---|
| 1 | சரபங்கா | 70 | தாத்தயம்பட்டி முதல் டி. கோனகாப்பாடி வரை (15 கி.மீ) | I |

| வ. எண் | ஆற்றின் பெயர் | ஆற்றின் நீளம் (கி.மீ) | மாசுபட்ட ஆற்றின் பகுதிகள் | முன்னுரிமை வருடம் 2022 |
|---|---|---|---|---|
| 2 | திருமணிமுத்தாறு | 120 | சேலம் முதல் பாப்பாரப்பட்டி வரை (15 கி.மீ) | I |
| 3 | வசிஷ்டா | 87 | மணி விழுந்தான் முதல் தியாகனூர் வரை (10 கி.மீ) | I |
| 4 | கூவம் | 70 | ஆவடி முதல் சத்யாநகர் வரை (31.70 கி.மீ) | I |
| 5 | அடையாறு | 42.50 | தாம்பரம் முதல் நந்தனம் வரை (30.10 கி.மீ) | I |
| 6 | காவேரி | 253 | மேட்டூர் முதல் மயிலாடுதுறை வரை (200 கி.மீ) | II |
| 7 | தாமிரபரணி | 128 | பாப்பன் குளம் முதல் ஆறுமுகனேரி வரை (80 கி.மீ) | IV |
| 8 | பவானி | 217 | சிறுமுகை முதல் காளிங்கராயன் வரை (60 கி.மீ) | V |
| 9 | வைகை | 266 | சோழவந்தான் முதல் சாக்குடி வரை (42 கிமீ) | V |

ஆறுகள் மாசு அடைவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆறுகளில் கலப்பது, திடக்கழிவுகள் கொட்டப்படுவது போன்ற செயல்பாடுகள் முக்கிய காரணமாக அமைகிறது.

இதற்கிணங்க, வாரியம் தொடர்புடைய துறைகளுடன் இணைந்து எட்டு மாசுபட்ட ஆற்றுப் பகுதிகளை மீட்டெடுப்பதற்கான செயல் திட்டங்களை தயாரித்துள்ளது. புதிதாக அடையாளம் காணப்பட்ட வைகை ஆற்றைத் தவிர பிற ஆறுகளுக்கான திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வைகை ஆற்றை மீட்டெடுப்பது குறித்த முதற்கட்டத் திட்ட அறிக்கையை நீர்வளத்துறை சமர்ப்பித்துள்ளது. அதனைத் தொடர்ந்து, நீர்வளத்துறையால் காலவரையறைக்குட்பட்ட செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். வைகை ஆற்றை மீட்டெடுப்பதற்கான அத்திட்டம் ஆறு புத்துயிர்ப்பு குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகு செயல்படுத்தப்படும். தொடர்புடைய மாநில மற்றும் ஒன்றிய அரசு அமைப்புகளால் இத்திட்டங்களின்

செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கடலோரப் பகுதிகளில் ஏற்படும் கடலோர மற்றும் கடல் மாசுபாட்டைக் குறைப்பதற்கான விரிவான செயல்திட்டத்தைத் தயாரிக்க சென்னை தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**5.8.3. நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்**

வாரியம் மாநிலம் முழுவதும் 8 இடங்களில் நிகழ்நேர நீர்தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. இந்நிலையங்களில், நீர்தர அளவுகளான, கார அமிலத் தன்மை, வெப்பநிலை, நீரில் கரைந்துள்ள உயிர்வளி, நீரின் கலங்கல் தன்மை, மின்கடத்துத் திறன், மொத்தக் கரைந்த திடப்பொருள்கள், மொத்த இடை மிதக்கும் திடப்பொருட்கள், உயிரி வேதியியல் ஆக்சிஜன்

தேவை, வேதியியல் ஆக்சிஜன் தேவை முதலியவை அளவீடு செய்யப்படுகின்றன.

வாரியத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்தில் மேற்கண்ட நிலையங்களிலிருந்து நிகழ்நேர தரவுகள் பெறப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு வாரிய இணையதளத்திலும் வெளியிடப்படுகின்றன. இத்தரவுகள், மாசுபடுத்தும் காரணிகளை கண்டறியவும் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும் உதவுகின்றன.

## 5.9. காற்று மாசுபாட்டைக் கண்காணிக்கும் செயல்முறை

### 5.9.1. தேசிய காற்றுதர கண்காணிப்பு திட்டம்

தேசிய சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் தொழில் கூடங்களில் 85 நிலையங்களை நிறுவி, சுற்றுப்புற

காற்றின் தரத்தை வாரத்திற்கு இரண்டு மாதிரிகள் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 104 மாதிரிகளை சேகரித்து, அவற்றில் நுண்துகள்கள் ($PM_{10}$ மற்றும் $PM_{2.5}$), சல்பர் டை ஆக்ஸைடு ($SO_2$), நைட்ரஜன் டை ஆக்ஸைடு ($NO_2$) மற்றும் அம்மோனியா ($NH_3$) ஆகிய காரணிகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின் படி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

| தேசிய சுற்றுப்புற காற்றுத் தர கண்காணிப்பு திட்டம் 85 நிலையங்கள் |
|---|
| சென்னை (8), கோயம்புத்தூர் (3), மதுரை (3), சேலம் (3), திருச்சி (5), தூத்துக்குடி (3), மேட்டூர் (3), கடலூர் (5), தருமபுரி (3), நாகர்கோவில் (3), பெரம்பலூர் (3), சிவகங்கை (3), திருவாரூர் (3), தேனி (3), விழுப்புரம் (3), திருவண்ணாமலை (3), ஆலந்தூர் (2), திண்டுக்கல் (2), வேலூர் (2), ஆவடி (2), திருப்பூர் (2), திருநெல்வேலி (2), தஞ்சாவூர் (2), நாகப்பட்டினம் (2), காஞ்சிபுரம் (2), ராஜபாளையம் (2), ஈரோடு (3) மற்றும் மேட்டுப்பாளையம், ஓசூர், தென்காசி, திருத்தணி மற்றும் திருவெங்காட்டில் தலா 1 கிராமப்புற நிலையங்கள் (மொத்தம் 5 கிராமப்புற நிலையங்கள்) உள்ளன. |

### 5.9.2. தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்

சுற்றுப்புற காற்றின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வகையில், வாரியம் மாநிலத்தில் மொத்தம் 34 இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று

தரக்கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. இந்நிலையங்களின் மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், சல்பர்–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு, அமோனியா, ஓசோன், கார்பன் மோனாக்சைடு, பென்சீன், டொலுவின் மற்றும் சைலீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. இத்தரவுகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளம் மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய மின்னணு காற்றுதர தரவு அமைப்பிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 5.9.3. காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள்

தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், காற்றில் 10 மைக்ரான் நுண்துகள்களின் அளவு வருடாந்திர சராசரி தரநிலை 60 $\mu g/m^3$ மேல் இருக்கும் 130 நகரங்களை, காற்று தர குறியீட்டினை எட்டாத

நகரங்கள் என ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வகைப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சென்னை ஆகிய நகரங்கள் இவ்வகையின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன.

2019–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தேசிய தூய காற்றுத் திட்டமானது, 10 மைக்ரான் நுண்துகள்களின் அளவை 40% குறைப்பது அல்லது தேசிய சுற்றுப்புறக் காற்றுத் தரநிலையை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து, வாகனப் புகையினால் ஏற்படும் மாசு, சாலைத் தூசு, கட்டுமான மற்றும் இடிமானக் கழிவுகள், மற்றும் உயிரிக் கழிவுகளைக் கொட்டுதல் மற்றும் எரித்தல் போன்றவற்றால் ஏற்படும் மாசு குறைப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.9.4. விரிவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் உள்ள 11 மாசுபட்ட தொழிற்சாலை பகுதிகளில்

பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு ஆய்வகங்கள் மூலமாக நிலம், காற்று மற்றும் நீர் தரத்தை பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் கண்காணித்து வருகிறது.

விரிவான சுற்றுச்சூழல் மாசுக் குறியீடு (CEPI) மதிப்பெண் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| CEPI மதிப்பெண் | >70 | 60-70 | 50-60 | 40-50 |
|---|---|---|---|---|
| வகை | மிகக் கடுமையாக மாசுபட்ட பகுதி | கடுமையாக மாசுபட்ட பகுதி | பொதுவாக மாசுபட்ட பகுதி | பிற மாசுபட்ட பகுதி |

ஒவ்வொரு ஆண்டும் பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 11 மாசுபட்ட தொழிற்சாலை

பகுதிகளுக்கான விரிவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு மதிப்புகள் தொகுக்கப்படுகின்றன.

2024 மற்றும் 2025–ஆம் ஆண்டுகளுக்கான பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய கண்காணிப்பு விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | இருப்பிடம் (PIA) | விரிடவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு மதிப்பெண்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | 2024 பருவ மழைக்கு முன் | 2024 பருவ மழைக்கு பின் | 2025 பருவ மழைக்கு முன் | 2025 பருவ மழைக்கு பின் |
| 1. | மணலி | 29.31 | 19.50 | 23.698 | 30.0 |
| 2. | ராணிப்பேட்டை | 14.96 | 16.30 | 17.705 | 21.8 |
| 3. | திருப்பூர் | 23.31 | 23.80 | 30.20 | 25.2 |
| 4. | மேட்டூர் | 20.99 | 20.99 | 23.693 | 19.7 |
| 5. | தூத்துக்குடி | 2.734 | 22.59 | 24.150 | 24.7 |
| 6. | கோயம்புத்தூர் | 4.317 | 13.73 | 17.945 | 17.9 |
| 7. | கடலூர் | 23.72 | 29.69 | 31.414 | 37.1 |
| 8. | ஈரோடு | 19.68 | 33.35 | 29.255 | 27.8 |

| வ. எண் | இருப்பிடம் (PIA) | விரிசவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு மதிப்பெண்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | 2024 பருவ மழைக்கு முன் | 2024 பருவ மழைக்கு பின் | 2025 பருவ மழைக்கு முன் | 2025 பருவ மழைக்கு பின் |
| 9. | பெருந்துறை | 7.80 | 19.01 | 22.86 | 20.6 |
| 10. | பள்ளிபாளையம் | 12.42 | 15.65 | 13.056 | 13.1 |
| 11. | குமாரபாளையம் | 12.42 | 12.95 | 13.056 | 23.4 |

2025–ஆம் ஆண்டிற்கான விரிவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு மதிப்புகளின் அடிப்படையில் அனைத்து மாசுபட்ட தொழில்சார் பகுதிகளும் 40–க்கு கீழ் உள்ளன.

## 5.10. சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு செயல் முறை

தேசிய சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு திட்டத்தின் கீழ், அமைதி மண்டலம், குடியிருப்பு மற்றும் தொழில்துறை பகுதிகளை உள்ளடக்கிய வகையில், சென்னை நகரின் 10 இடங்களில் நிகழ்நேர சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு நிலையங்களை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒன்றிய மாசு கட்டுப்பாடு

வாரியத்துடன் இணைந்து நிறுவியுள்ளது. அவை பின்வருமாறு.

| வ. எண் | இடம் | வகைப்பாடு | சராசரி மதிப்பு பகல் (டெசிபல்) | பகல் தரநிலை (டெசிபல்) | சராசரி மதிப்பு இரவு (டெசிபல்) | இரவு தரநிலை (டெசிபல்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | எழும்பூர் (கண் மருத்துவமனை) | அமைதி மண்டலம் | 56 | 50 | 54 | 40 |
| 2. | தியாகராயா நகர் | வணிகப் பகுதி | 64 | 65 | 61 | 55 |
| 3. | பெரம்பூர் | வணிகப் பகுதி | 61 | 65 | 60 | 55 |
| 4. | கிண்டி | தொழில்துறை பகுதி | 65 | 75 | 64 | 70 |
| 5. | திருவல்லிக்கேணி | குடியிருப்பு பகுதி | 62 | 55 | 54 | 45 |
| 6. | அண்ணா நகர் | அமைதி மண்டலம் | 69 | 50 | 63 | 40 |
| 7. | பள்ளிக்கரணை | வணிகப் பகுதி | 71 | 65 | 70 | 55 |
| 8. | சௌகார்ப்பேட்டை | குடியிருப்பு பகுதி | 66 | 55 | 59 | 45 |
| 9. | வேளச்சேரி | குடியிருப்பு பகுதி | 60 | 55 | 56 | 45 |
| 10. | வண்ணாரப்பேட்டை | வணிகப் பகுதி | 68 | 65 | 67 | 55 |

இந்நிலையங்களில் பதிவுசெய்யப்படும் பகல் மற்றும் இரவு நேர இரைச்சல் அளவுகள், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இத்தரவுகள், ஒலி மாசு குறைப்பு நடவடிக்கைகளுக்கும், ஒலி

மாசுபாட்டை திறம்பட மேலாண்மை செய்வதற்கும் துணைபுரிகின்றன.

### 5.11. பத்து இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் ஒலி வரைபட ஆய்வு – சென்னை

சென்னை மாநகரில், 60 இடங்களில் ஒலி உணர்கருவிகளை நிறுவுவதன் மூலம், இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னை (IIT–M) ரூ.50 இலட்சம் செலவில் ஒலி வரைபட ஆய்வு மேற்கொண்டுள்ளது. உணர்கருவி அடிப்படையிலான ஒலி கண்காணிப்புக் கருவிகள் நிறுவப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆய்வகத்துடன் நிகழ்நேர இணைப்பு பொருத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து 60 கண்காணிப்பு இடங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, விரிவான அறிக்கையாக தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வு, ஆதாரங்களின் அடிப்படையிலான கொள்கை வகுத்தல், நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் இலக்கை அடிப்படையாகக் கொண்ட ஒலி மாசுக் குறைப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கிறது.

### 5.12. ஆய்வக தகவல் மேலாண்மை அமைப்பு

சுற்றுச்சூழல் கண்காணிப்பு தொடர்பான ஆய்வகப் பணிகளை மின்னணுமயமாக்கி திறம்பட செயல்படுத்துவதற்காக இணையவழி ஆய்வகத் தகவல் மேலாண்மை அமைப்பை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உருவாக்கியுள்ளது. இவ்வமைப்பு, மாதிரி சேகரிப்பு கால அட்டவணை, மாதிரி கண்காணிப்பு, ஆய்வகப் பகுப்பாய்வு, பகுப்பாய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வுக் கட்டணத்தை இணையவழியில் செலுத்துதல் போன்ற வசதிகளை வழங்குகிறது.

இது ஆய்வகத் தரவுகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகளுக்கான மையப்படுத்தப்பட்ட தரவுக் களஞ்சியமாக செயல்பட்டு, செயல்திறன்,

வெளிப்படைத்தன்மை, தரவு நம்பகத்தன்மை மற்றும் தரவுகளை அணுகும் வசதி ஆகியவற்றை மேம்படுத்துகிறது. மேலும், சுற்றுச்சூழல் இணக்க கண்காணிப்பை வலுப்படுத்துவதுடன், ஆதாரங்களின் அடிப்படையிலான ஒழுங்குமுறை முடிவுகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொள்வதற்கு ஆதரவளிக்கிறது.

## 6. கழிவு மேலாண்மை செயல் முறை

### 6.1. உயிரிமருத்துவக் கழிவு மேலாண்மை

உயிரிமருத்துவக் கழிவுகள் என்பது மனிதர்கள் அல்லது விலங்குகளுக்கு சிகிச்சை அளித்தல், நோய்த்தடுப்பு மருந்துகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள், உயிரியல் ஆய்வகங்களில் உற்பத்தி மற்றும் பரிசோதனை ஆகியவற்றின் போது உற்பத்தியாகும் கழிவுகள் ஆகும். உயிரிமருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016-இன் படி மருத்துவ கழிவுகளை உருவாக்குபவர்கள் மற்றும் உயிரிபொதுமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் போன்றவைகள்

பாதுகாப்பான மருத்துவ கழிவுகளை கையாளுவதையும் அகற்றுதலையும் உறுதி செய்வதற்கான பொறுப்புகளை வரையறுக்கின்றன.

சுகாதார நிலையங்கள் மற்றும் பொது உயிரியல் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதுடன் இவ்விதிகள் முறையாக கடைப்பி கப்படுவதை வாரியம் கண்காணிக்கிறது. இவ்விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க அரசு, மாநில அளவில் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், மார்ச் 2026 வரை 33,940 படுக்கை மற்றும் படுக்கை வசதியில்லா தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள், கால்நடை நிறுவனங்கள், நோயியல் ஆய்வகங்கள், இரத்த வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன் படி வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 6.1.1. பொது உயிரிமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு வசதிகள்

பொது உயிரிமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள், மருத்துவக் கழிவுகளை தனிப்பட்ட மருத்துவ அமைப்புகளிடமிருந்து சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு மற்றும் அறிவியல் பூர்வமாக அகற்றுவதற்காக செயல்படுகின்றன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அளிக்கப்பட்ட 2025–ஆம் ஆண்டு அறிக்கையின்படி, மாநிலத்தில் தினசரி சராசரியாக 61.39 டன் உயிரிமருத்துவ கழிவுகள் உருவாகின்றன. மாநிலத்தில் 11 பொது உயிரிமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளில் மொத்த நிறுவப்பட்ட திறன், நாளொன்றுக்கு 101.63 டன்களாகும். மேலும், 3 பொது உயிரிமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் திருவள்ளூர், சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிறுவப்பட உள்ளன. தமிழ்நாட்டில் தனிப்பட்ட மருத்துவ அமைப்புகளிலிருந்து பொது மருத்துவக் கழிவு

சுத்திகரிப்பு அமைப்புகளுக்கு மருத்துவக் கழிவுகள் எடுத்துச் செல்லும் வாகனங்களின் இயக்கத்தினை உலகளாவிய நிலைப்படுத்துதல் அமைப்பின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

| தமிழ்நாட்டில் இயக்கத்தில் உள்ள பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு: | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் மற்றும் முகவரி | செயல்திறன் எரிப்பான் (கிலோகிராம்/ நாள் ஒன்றுக்கு) | கிருமிகள் அழிப்பான் (கிலோகிராம்/நாள் ஒன்றுக்கு) | மாவட்டங்கள் |
| 1 | தி/ள். ஜி.ஜே. மல்டிகிளேவ் (இந்தியா) லிமிடெட், செங்கல்பட்டு மாவட்டம். | 10, 800 | 3,052 | காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி, திருவள்ளூர், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள். |
| 2 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஐ. டபிள்யு.எம் சொல்யுஷன்ஸ் லிமிடெட், செங்கல்பட்டு மாவட்டம் | 9,000 | 1,000 | சென்னை (வ), காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் கடலூர். |
| 3 | தி/ள் மெடிகேர் என்விரோ சிஸ்டம்ஸ், தஞ்சாவூர் மாவட்டம் | 3,600 | 2,000 | தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, நாகப்பட்டனம், புதுக்கோட்டை சிவகங்கை மாவட்டங்கள். |
| 4 | தி/ள். கென் பயோ லிங்ஸ் பிரைவேட் லிமிடெட், வேலூர் மாவட்டம் | 6,000 | 3,600 | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள். |

| தமிழ்நாட்டில் இயக்கத்தில் உள்ள பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு: | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் மற்றும் முகவரி** | **செயல்திறன் எரிப்பான் (கிலோகிராம்/ நாள் ஒன்றுக்கு)** | **கிருமிகள் அழிப்பான் (கிலோகிராம்/நாள் ஒன்றுக்கு)** | **மாவட்டங்கள்** |
| 5 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஹெல்த்கேர் சொல்யுஷன்ஸ் லிமிடெட், சேலம் மாவட்டம் | 3,300 | 825 | சேலம், நாமக்கல், ஈரோடு &கரூர் |
| 6 | தி/ள். கோவை பயோவேஸ்ட் மெனெஜ்மெண்ட் (பி) லிமிடெட், கோயம்புத்தூர் | 6,000 | 4,800 | கோயம்புத்தூரின் ஒரு பகுதி, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 7 | தி/ள். டெக்னோதெர்ம் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் மாவட்டம் | 6,000 | 12,000 | கோயம்புத்தூரின் ஒரு பகுதி, நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள். |
| 8 | தி/ள். அஸெப்டிக் சிஸ்டம் பயோ மெடிக்கல் வேஸ்ட் மேனேஜ்மென்ட், திருநெல்வேலி | 4,000 | 2,800 | திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்கள். |
| 9 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஐ. டபிள்யு.எம்சொல்யுஷன்ஸ்லிமிடெட், கிருஷ்ணகிரி மாவட்டம் | 1,550 | 450 | தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 10 | தி/ள். பாண்டிச்சேரி சாலிட் வேஸ்ட் மெனெஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், கடலூர் மாவட்டம் | 12,000 | 2,347 | கடலூரின்ஒருபகுதிவிழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி |
| 11 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஐடபுள்யூ சொல்யுஷன்ஸ் லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம் | 4,000 | 1,000 | சென்னையின் ஒரு பகுதி மற்றும் திருவள்ளூர் மாவட்டம். |

| தமிழ்நாட்டில் நிறுவப்பட உள்ள பொது உயிரிமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் விவரங்கள் பின் வருமாறு: | | | |
|---|---|---|---|
| வ. எண் | பொது உயிரிமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் பெயர் மற்றும் முகவரி | இயந்திரங்களின்செயல்திறன் எரிப்பான் (கிலோகிராம்/ நாள் ஒன்றுக்கு) | கிருமிகள் அழிப்பான் (கிலோகிராம்/நாள்ஒன்றுக்கு) |
| 1 | தி/ள். மெடிகேர் என்விரான்மென்டல் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட், சிவகங்கை மாவட்டம். | 12,000 | 5,100 |
| 2 | தி/ள். எஸ். கிரோத் அலையன்சஸ் எல்எல்பி, காஞ்சிபுரம் மாவட்டம். | 19,200 | 8,000 |
| 3 | தி/ள்.பாரிசுத் எகோ கன்செப்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம் | 12,000 | 8,000 |

## 6.2. மின்கலக்கழிவு மேலாண்மை

மின்கலக்கழிவு (மேலாண்மை) விதிகள், 2022, திருத்தப்பட்டபடி, மின்கலக்கழிவு வேதியியல் தன்மை, வடிவம், எடை அல்லது பயன்பாடு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், கழிவு மின்கலம் சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், நுகர்வோர்கள்

மற்றும் நிறுவனங்களுக்குப் பொருந்தும். இந்த விதிகள், சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி இலக்குகளை அடைவதற்காக, உற்பத்தியாளர்கள் (தயாரிப்பாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள்) மீது விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை விதிக்கின்றன.

உற்பத்தியாளர்கள், மறுசுழற்சி செய்வோர் மற்றும் புதுப்பிப்போர் ஆகியோர் https://eprbatterycpcb.in என்ற மையப்படுத்தப்பட்ட ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். இதனால் பொறுப்பு, கண்காணிப்பு திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதுடன், அமலாக்க ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கான ஒற்றை புள்ளி தரவு களஞ்சியமாக இது செயல்படும்.

தமிழ்நாட்டில் 31.03.2026 வரை, 14 மின்கலக் கழிவு மறுசுழற்சி அமைப்புகள் மற்றும் 319 மின்கலக்கழிவு உற்பத்தியாளர்கள் தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம் மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்துள்ளனர். அதன் விவரங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளம் https://tnpcb.gov.in மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்தில் உள்ளது. உற்பத்தியாளர்களின் விண்ணப்பங்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும், மறுசுழற்சி மற்றும் புதுப்பிப்பு செய்பவர்களின் விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும் அங்கீகரிக்கப்படுகின்றன. தயாரிப்பாளர்கள், மறுசுழற்சியாளர்கள் மற்றும் புதுப்பிப்பாளர்களுக்கான விரிவான வழிகாட்டியாகச் செயல்படும் மின்கலக்கழிவு மேலாண்மைக்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு வழிகாட்டு கையடக்க நூலை வாரியம் வெளியிட்டுள்ளது. இந்த கையடக்க நூல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 6.3. திடக்கழிவு மேலாண்மை

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டம், 1986–இன் கீழ் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டு, 01 ஏப்ரல் 2026 முதல் நடைமுறைபடுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026, 2016–ஆம் ஆண்டு விதிகளை ரத்து செய்கின்றன. இந்த விதிகள், கழிவுகளைப் பிரித்தல், மறுசுழற்சி செய்தல், உரம் தயாரித்தல் மற்றும் வள மீட்பு ஆகியவற்றின் மூலம் அறிவியல் பூர்வமான கழிவு மேலாண்மையைக் கட்டாயமாக்குவதோடு, இணையவழிக் கண்காணிப்பு, விரிவாக்கப்பட்ட மொத்தக் கழிவு உருவாக்குநரின் பொறுப்புடைமை மற்றும் மாசினை நீக்குவதற்கான தொகையினை ஏற்க வேண்டும் என்ற கொள்கை மூலம் பொறுப்புடைமையையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் வலுப்படுத்துகிறது.

இந்த விதிகள் நான்கு வகை கழிவு பிரிவினையை கட்டாயமாக்குகின்றன: (i) ஈரக் கழிவுகள், (ii) உலர்

கழிவுகள், (iii) சுகாதாரக் கழிவுகள் மற்றும் (iv) சிறப்பு பராமரிப்புக் கழிவுகள். 20,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிறுவனங்கள் அல்லது அதற்கு மேற்பட்டவை, அல்லது ஒரு நாளைக்கு 40,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீர் நுகர்வு, அல்லது ஒரு நாளைக்கு 100 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட திடக்கழிவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களை மொத்த கழிவு உற்பத்தியாளர்கள் என்று வரையறுக்கப்படுகிறது. இந்த விதி விரிவாக்கப்பட்ட மொத்த கழிவு உற்பத்தியாளர் பொறுப்பை அறிமுகப்படுத்துகிறது. மேலும், திடக்கழிவு மேலாண்மையை இணையவழி மூலம் கண்காணிக்க, ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மையப்படுத்தப்பட்ட இணையதளம் உருவாக்கப்படும்.

மேற்கூறப்பட்ட விதிகளின் கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிப்பு அதிகார அமைப்பாகச் செயல்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் அதிகார வரம்பிற்குள் நாளொன்றுக்கு 5 மெட்ரிக் டன்களுக்கு

மேல் உற்பத்தி செய்யும் கழிவுகளை தரம் பிரித்தல், சுத்திகரிப்பு அல்லது அகற்றும் வசதிகளை அமைப்பதற்கு, வாரியம் அங்கீகாரம் வழங்குகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி, தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகளை முறையாக பின்பற்றாத 36 உள்ளாட்சி அமைப்புகளுக்கு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டம், 1986, பிரிவு 5 இன் கீழ் சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகை செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 6.3.1. குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல்

திடக்கழிவுகள் மேலாண்மை விதிகளின்படி, பழைய குப்பைக் கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மற்றும் நில மீட்பு பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில்,

290 பழைய குப்பைக் கிடங்கு இடங்களில் உயிரி நிலப்பரப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் 241 இடங்களில் நில மீட்பு பணிகள் நிறைவடைந்துள்ளன மீதமுள்ள 49 இடங்களில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை மொத்தம் 1,206 ஏக்கர் நிலப்பரப்பு மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

### 6.4. நெகிழி கழிவு மேலாண்மை

மக்கள் தொகை பெருக்கம், நகரமயமாக்கல், பொருளாதார நிலை மற்றும் தொழில்துறை வளர்ச்சி ஆகியவை நெகிழிக் கழிவுகளின் உற்பத்தி அதிகரிக்க காரணமாகின்றன. தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு 2,170 டன் நெகிழி கழிவுகள் உருவாகின்றன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 99.7% (நாளொன்றிற்கு 2163 டன்) கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி மற்றும் இதர பயன்பாட்டிற்காக அனுப்பப்படுகிறது.

### 6.4.1. ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் நெகிழிப் பொருட்கள் மீதான தடை

தமிழ்நாடு அரசு, 25.06.2018 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண்.84–ல், நெகிழித் தூக்குப்பைகள் உட்பட, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் சில வகை நெகிழி பொருட்கள் பயன்படுத்த தடையினை 01.01.2019 முதல் அறிவித்தது. மேலும், இந்திய அரசின் 12.08.2021 நாளிட்ட அறிக்கையின் வாயிலாக, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 19 வகையான நெகிழிப் பொருட்களின் தயாரிப்பு, இறக்குமதி, இருப்பு வைத்தல், விநியோகம், விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் மீதான தடையை 01.07.2022 முதல் அறிவித்தது.

தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்களின் விபரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் | வ. எண் | தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் |
|---|---|---|---|
| 1. | உணவுப் பொருட்களை கட்ட உபயோபடுத்தப்படும் பிளாஸ்டிக் தாள் உறை | 15. | காது மொட்டுகளுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 2. | உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் பிளாஸ்டிக் தாள் | 16. | பலூன்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 3. | பிளாஸ்டிக் தெர்மக்கோல் தட்டுகள் | 17. | மிட்டாய்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 4. | பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித தட்டுகள் | 18. | ஐஸ்கிரீம்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 5. | பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித குவளைகள் | 19. | பிளாஸ்டிக் முட்கரண்டிகள் |
| 6. | பிளாஸ்டிக் குவளைகள் | 20. | அலங்காரத்திற்காக பயன்படுத்தப்படும் பாலிஸ்டிரீன் [தெர்மாகோல்] |
| 7. | பிளாஸ்டிக் கோப்பைகள் | 21. | பிளாஸ்டிக் கரண்டிகள் |
| 8. | தெர்மக்கோல் குவளைகள் | 22. | பிளாஸ்டிக் கத்திகள் |
| 9. | பிளாஸ்டிக் பைகள் (எந்த அளவிலும், எந்த தடிமனாக இருப்பினும்) | 23. | மெல்லிய பிளாஸ்டிக் கொண்டு போர்த்தப்படும் அல்லது பேக்கிங் செய்யப்படும் இனிப்பு பெட்டிகள் |
| 10. | பிளாஸ்டிக் பூசப்பட்ட பைகள் | 24. | மெல்லிய பிளாஸ்டிக் கொண்டு போர்த்தப்படும் அல்லது பேக்கிங் செய்யப்படும் அழைப்பிதழ் அட்டைகள், |

| | | | |
|---|---|---|---|
| 11. | நெய்யாத பிளாஸ்டிக் தூக்குப் பைகள் (ஒரு சதுர மீட்டருக்கு 60 கிராம்) | 25. | மெல்லிய பிளாஸ்டிக் கொண்டு போர்த்தப்படும் அல்லது பேக்கிங் செய்யப்படும் சிகரெட் பாக்கெட்டுகள் |
| 12. | பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்கள் | 26. | 100 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் அல்லது பிவிசி பேனர்கள் |
| 13. | பிளாஸ்டிக்காலான உறிஞ்சு குழாய்கள் | 27. | பிளாஸ்டிக் கிளறிகள் |
| 14. | பிளாஸ்டிக் கொடிகள் | 28. | பிளாஸ்டிக் தட்டுகள் |

### 6.4.2. நெகிழித் தடை மீதான அமலாக்கம்

ஜனவரி 2019 முதல் மார்ச் 2026 வரை, வாரியம் தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருட்களான நெய்யப்படாத தூக்குப்பைகள், நெகிழி தூக்குப்பைகள், தண்ணீர் பைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 293 தொழிற்சாலைகளை மூடவும் மற்றும் மின் இணைப்புகளை துண்டிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அதிகாரிகளால் அவ்வப்போது சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. 2019 முதல் மார்ச் 2026 வரை, 18,20,554 சோதனைகள் பதிவாகியுள்ளன, இதில் 2,779.42 டன்

தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.23.98 கோடி அபராதம் உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 6.4.3. சிறப்பு அமலாக்க நடவடிக்கைகள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி, நான்கு ஆண்டு காலத்தில், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வீதியோர வியாபாரிகள், பூ மற்றும் பழக்கடைகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் மொத்த விற்பனை சந்தைகள், தொழில்துறை பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைப்பகுதிகள் மற்றும் தொடர்புடைய தொழிற்சாலைகளை இலக்காகக் கொண்டு தீவிர அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த காலகட்டத்தில், 1,14,624 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 31,380 விதிமீறல்கள் பதிவு செய்யப்பட்டு, 168.23 டன் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருட்கள்

பறிமுதல் செய்யப்பட்டு, மறுசுழற்சிக்கு அனுப்பப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளால் மொத்தம் ரூ.1.31 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 6.4.4. நெகிழித் தடை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடத்தப்படும் மாவட்ட அளவிலான பிரச்சாரத்தில் வாகன பிரச்சாரங்கள், துண்டுப்பிரசுர விநியோகம், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் போக்குவரத்து மையங்களில் சுவரொட்டி காட்சி, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழியின் தீங்குகள் குறித்து ஆங்கிலம் மற்றும் தமிழில் செய்தி வெளியீடுகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒவ்வொரு மாதமும்

நான்காவது சனிக்கிழமையன்று நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களை ஈடுபடுத்தும் வகையில் மாநிலம் தழுவிய நெகிழிச் சேகரிப்பு மற்றும் துப்புரவு இயக்கத்தை நடத்தி வருகிறது.

### 6.4.5. நெகிழி பொட்டலம் கட்டுவதற்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு

நெகிழி பொட்டலம் கட்டுவதற்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் (2022–ல் திருத்தப்பட்டபடி) கீழ் செயல்படுத்தப்படுகிறது. உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு உரிமையாளர்கள் தங்களின் நெகிழிப் பொட்டலக் கழிவுகளை மறுசுழற்சி, மறுபயன்பாடு அல்லது அவற்றின் ஆயுட்கால முடிவில் அகற்றுதல் (நெகிழிக் கழிவிலிருந்து ஆற்றல் கொண்டு வருதல், எண்ணெய் தயாரித்தல், சாலை அமைக்க பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு

பயன்படுத்துதல்) போன்றவற்றின் மூலம் செயலாக்குவதை உறுதிசெய்வது அவர்களின் பொறுப்பாகும். வணிக குறியீட்டு உரிமையாளர்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் உருவாக்கிய மையப்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு இணையமுகப்பின் வலைதளம் https://eprplastic.cpcb.gov.in மூலம் பதிவு செய்கின்றன. நெகிழி மூலப்பொருட்களின் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள், சிறு மற்றும் குறு உற்பத்தியாளர்களுக்கான இணைய முகப்பில் பதிவு செய்து கொள்ளும் வசதி 12.04.2024 அன்று முதல் செயல்பாட்டுக்கு வந்தது.

நெகிழிக்கழிவினை முறைப்படுத்துபவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் உருவாக்கப்பட்டு மையப்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு வலைதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். நெகிழிக்கழிவினை

முறைப்படுத்துபவர்களிடமிருந்து விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு சான்றிதழ்களை இணைய முகப்பில் பெறுவதன் மூலம் வணிக குறியீட்டு உரிமையாளர்கள் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு கடமைகளை நிறைவேற்றுகின்றன. 31 மார்ச் 2026 வரை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1519 நிறுவனங்களுக்கும் (170 உற்பத்தியாளர்கள், 1134 இறக்குமதியாளர்கள், 100 வணிக குறியீட்டு உரிமையாளர்களுக்கும் மற்றும் 1 விற்பனையாளர்) மற்றும் 114 நெகிழிக்கழிவினை முறைப்படுத்துபவர்களுக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நகராட்சி நிர்வாகத் துறையுடன் இணைந்து 158 உள்ளாட்சி அமைப்புகளை விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு இணையதளம் மூலம் பதிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பினை வலுப்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகள்.

- விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு பதிவு மற்றும் இணக்கத்தை ஆதரிக்க வார நாட்களில் செயல்படும் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு பிரிவு நிறுவப்பட்டது; விளக்கங்களைக் கோரி சுமார் 3,055 அழைப்புகள் பெறப்பட்டன.

- விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு இணக்கத்தை உறுதி செய்வதற்காக, பதிவு செய்யப்படாத 1,681 நிறுவனங்களுக்கு, 801 உற்பத்தியாளர்கள், 396 நெகிழிக்கழிவினை முறைப்படுத்துபவர்கள் மற்றும் 484 வணிக குறியீட்டு உரிமையாளர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு உரிமையாளர்கள்,

மற்றும் நெகிழிக் கழிவினை முறைப்படுத்துபவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு, பதிவு செய்தல், குறிக்கோள் அடைதல் மற்றும் இணக்கச் செயல்முறை ஆகியவற்றை உள்ளடக்கிய 20–க்கும் மேற்பட்ட பயிற்சி அமர்வுகள் மற்றும் பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளது.

- பங்குதாரர்களுக்கு உதவுவதற்காக விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு கையேடு, பயனர் கையேடு மற்றும் மறுசுழற்சி விவரப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

### 6.4.6. மாநில அளவிலான சிறப்பு பணிக்குழு

ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக, தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான சிறப்பு பணிக்குழு, மற்றும் மாவட்ட ஆட்சியர் / ஆணையர் (பெருநகர சென்னை

மாநகராட்சி) கீழ் உள்ள மாவட்ட அளவிலான பணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டது. சிறப்பு பணிக்குழு சீரான இடைவெளியில் கூட்டம் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு செயல் திட்டங்கள் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்து வருகிறது.

### 6.5. கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டம், 1986–இன் கீழ் அறிவிக்கப்பட்ட சுற்றுச்சூழல் (கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை) விதிகள், 2025, 01.04.2026 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. இவ்விதிகள், 2016–ஆம் ஆண்டு விதிகளுக்கு மாற்றாக அமல்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதிகள், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேலாண்மை செய்வதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளதுடன், சுழற்சிப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்

வளங்களின் திறன்மிக்க பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் இழப்பீடு போன்ற புதிய ஏற்பாடுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளன.

இந்த விதிகளுக்கு இணங்க செயல்படுமாறு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய தொடர்புடைய துறைகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. மேலும் இவ்விதிகளின்படி, மாநில சுற்றுச்சூழல் துறையின் செயலாளர் தலைமையில், தொடர்புடைய பங்குதாரர்களின் பிரதிநிதித்துவத்துடன் ஒரு மாநிலக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, விதிகள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பைக் கிடங்குகளில் தலா நாளொன்றுக்கு 400 டன் திறன் கொண்ட இரண்டு கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு செயலாக்க நிலையங்களை இயக்கி வருகிறது. மேலும், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளைப் பெறுவதற்காக 15 மண்டலங்களிலும் சேகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 6.6. மின்னணு கழிவு மேலாண்மை

மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகள், 2022 மின்னணுக் கழிவு மறுசுழற்சிக்கு மேம்படுத்தப்பட்ட உற்பத்தியாளர்களின் விரிவாக்கப்பட்ட பொறுப்பு நடைமுறையை வழிவகுக்கின்றன. இவ்விதிகளின்படி உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் மறுசுழற்சி செய்பவர்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் உருவாக்கப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு இணைய முகப்பு https://eprewastecpcb.in–இல் பதிவு செய்ய வேண்டும். 31.03.2026 நிலவரப்படி,

தமிழ்நாட்டில் 22 உற்பத்தியாளர்கள், 17 மின்னனு கழிவு மறுசுழற்சி செய்பவர்கள், 2 புதுப்பிப்பவர்கள் மற்றும் 1280 மின் மற்றும் மின்னனு உபகரணங்கள் தயாரிப்பாளர்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

## 6.7. தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை

தமிழ்நாட்டில் தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லைத் தாண்டிய இயக்கம்) விதிகள், 2016-இன் படி தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை செய்யப்படுகின்றன. மார்ச் 2025 நிலவரப்படி, தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உருவாக்கும் 5,259 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அடையாளம் காணப்பட்டு, மேற்கண்ட விதிகளின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில் மொத்தம் 11.20 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உருவாகியுள்ளன. இதில் 1.24 இலட்சம் டன் (11.11%) நிலத்தில்

பாதுகாப்பாக புதைக்கப்பட வேண்டியவை, 0.36 இலட்சம் டன் (3.26%) எரிப்பு மூலம் அகற்றப்பட வேண்டியவை, 6.19 இலட்சம் டன் (55.29%) மறுசுழற்சி செய்யக்கூடியவை மற்றும் 3.39 இலட்சம் டன் (30.31%) மீண்டும் பயன்படுத்தக்கூடியவை ஆகும்.

### 6.7.1. பொது தீங்கு விளைவிக்கும் கழிவு அகற்றும் வசதி (நிலத்தில் பாதுகாப்பாக கொட்டப்படக்கூடிய மற்றும் எரிப்பான் மூலமாக எரிக்கப்படக்கூடிய)

சுத்திகரிப்பு செய்து, சேமித்து மற்றும் அகற்றும் மூன்று பொது தீங்கு விளைவிக்கும் கழிவு அகற்றும் வசதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

| இருப்பிடம் | வசதி பற்றிய விவரங்கள் | | ஒவ்வொரு வசதியின் அங்கீகரிக்கப்பட்ட திறன் (டன்களில்) | ஒட்டு மொத்தமாக அகற்றப்பட்ட அபாயகரமான கழிவுகளின் விவரம் (டன்களில்) |
|---|---|---|---|---|
| | வசதியின் வகை | தொடங்கப்பட்ட ஆண்டு | | |
| திருவள்ளூர் மாவட்டம் | நிலப்பரப்பில் நிரப்புதல் | நவம்பர் 2007 | 3 இலட்சம் | 9.64 லட்சம் |
| | எரியூட்டல் | நவம்பர் 2009 | 0.12 இலட்சம் | 0.573 லட்சம் |
| | மறு பயன்பாடு | மார்ச் 2023 | 0.50 இலட்சம் | 0.029 லட்சம் |
| விருதுநகர் மாவட்டம் | நிலப்பரப்பில் நிரப்புதல் | டிசம்பர் 2016 | 2.4 இலட்சம் | 1.14 லட்சம் (31.3.2023 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மறு பயன்பாடு | ஏப்ரல் 2022 | 0.1 இலட்சம் | செயல்படவில்லை) |
| கிருஷ்ணகிரி மாவட்டம் | நிலப்பரப்பில் நிரப்புதல் | ஜூன் 2023 | 0.909 இலட்சம் | 0.26 இலட்சம் |
| | மறு பயன்பாடு | ஜூன் 2023 | 0.303 இலட்சம் | 0.043 |

## 6.7.2. தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு

### 6.7.2.1. சிமெண்ட் ஆலைகளில் அபாயகரமான கழிவுகளை இணைச்செயலாக்கம் செய்தல்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி, தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லைத் தாண்டிய இயக்கம்) விதிகள், 2016–இன் கீழ் உரிய அங்கீகாரம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இணக்க நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் அடிப்படையில், தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகளை சிமெண்ட் ஆலைகளில் மாற்று மூலப்பொருளாகவோ அல்லது மாற்று எரிபொருளாகவோ பயன்படுத்த, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

15 சிமெண்ட் தொழிற்சாலைகள், ஆண்டுக்கு 19.43 இலட்சம் டன் பயனுள்ள கழிவுகளை இணைச்செயலாக்கம் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2024–25–ஆம் ஆண்டில், சுமார் 2.40 லட்சம் டன்கள் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மாற்று மூலப்பொருளாகவோ அல்லது மாற்று எரிபொருளாகவோ மாற்றப்பட்டு தமிழ்நாட்டில் பல்வேறு சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணைச்செயலாக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 6.7.2.2. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகள்

ஒன்பது வகையான தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக 96 மறுசுழற்சி அமைப்புகளுக்கு வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த அமைப்புகளுக்கு, மொத்த அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி திறன் ஆண்டுக்கு 8.01149 இலட்சம் டன் ஆகும். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | மறுசுழற்சி செய்யப்பட்டு கழிவுகளின் வகைப்பாடு | அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | அங்கீகாரம் கொடுக்கப்பட்ட அளவு (ஆண்டு ஒன்றுக்கு டன்களில் |
|---|---|---|---|
| 1 | பித்தளை கழிவுகள் | 2 | 1120 |
| 2 | துத்தநாகக் கழிவுகள் | 10 | 9482 |
| 3 | தாமிரம் கலந்த கழிவுகள் | 8 | 149110 |
| 4 | நிக்கல், காட்மியம், துத்தநாகம், தாமிரம், ஆர்சனிக், வெனடியம் மற்றும் கோபால்ட் ஆகியவற்றைக் கொண்ட கழிவு வினையூக்கி | 1 | 12000 |
| 5 | காரியம் கழிவுகள் மற்றும் காரிய பேட்டரிகள் | 16 | 431172 |
| 6 | மின் கழிவுகள் | 2 | 1385 |
| 7 | பெயின்ட் கழிவுகள் | 2 | 2800 |
| 8 | பயன்படுத்தப்பட்ட எண்ணெய் | 39 | 150538 |
| 9 | கழிவு எண்ணெய் | 16 | 43540 |
| | **மொத்தம்** | 96 | 801149 |

### 6.7.2.3. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை முன்செயலாக்கம் செய்யும் தொழிற் சாலைகள்

இணைச்செயலாக்கத்தை எளிதாக்கும் நோக்கில் சிமெண்ட் சூளைகளில் மூலப்பொருள் இணைச்செயலாக்கத்திற்கு பயன்படுத்த ஏற்ற ஒரே தரநிலையுடைய உள்ளீட்டுப் பொருளைத் தயாரிப்பதற்காக 10 தீங்கு விளைவிக்கும்

கழிவு முன்செயலாக்க தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்சாலைகள், 2024–2025–ஆம் ஆண்டில் சுமார் 97,576.443 டன் தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகளை முன்கூட்டியே செயலாக்கபட்டு, சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணைச்செயலாக்கத்திற்கு அனுப்பியுள்ளன.

### 6.7.2.4. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மறுபயன்பாடு செய்யும் தொழிற்சாலைகள்

வாரியம் கழிவுகளை மறுபயன்பாடு செய்வதற்கு 28 தொழிற்சாலைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | மறு பயன்பாட்டிற்கு உகந்த தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட வசதிகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட அளவு (ஆண்டு ஒன்றுக்கு டன்களில்) |
|---|---|---|---|
| 1 | பயன்படுத்தப்பட்ட கரைப்பான்கள் | 10 | 24598 |
| 2 | பயன்படுத்தப்பட்ட டிரம்ஸ்/ கொள்கலன்கள் மற்றும் பீப்பாய்கள் | 18 | 51475 |
| | **மொத்தம்** | **28** | **76073** |




**2018–19 முதல் 2024–25 வரையிலான ஆண்டுகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய பயன்படுத்தக்கூடிய கழிவுகளின் போக்கைக் காட்டும் வரைபடம்**




**2018–19 முதல் 2024–25 வரையிலான ஆண்டுகளில் நிலப்பரப்பு மற்றும் எரிக்கக்கூடிய கழிவு சதவீதத்தின் போக்கைக் காட்டும் வரைபடம்**

### 6.7.2.5. பயன்படுத்திய எண்ணெய்க்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு

இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவு மேலாண்மை (திருத்தப்பட்ட) விதிகள், 2023–இன் கீழ் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை அறிவித்துள்ளது. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் உற்பத்தியாளர்கள், சேகரிப்பு முகவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் பயன்படுத்திய எண்ணெய் இறக்குமதியாளர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களும் பதிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட எண்ணெய் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பிற்கான இணையவழி முகப்பினை (https://eprusedoil.cpcb.gov.in) உருவாக்கியுள்ளது. நீட்டிக்கப்பட்ட தயாரிப்பாளர் பொறுப்பு கடமைகள் 2024–2025–இல் செயல்பாட்டுக்கு வந்தன. 31.03.2026 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் பத்து உற்பத்தியாளர்களும்,

ஏழு மறுசுழற்சியாளர்களும், பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புச் சான்றிதழ்களை பெற்றுள்ளனர்.

## 6.8. டயர் கழிவுக்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு

தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லைத் தாண்டிய இயக்கம்) திருத்த விதிகள், 2022–இன் கீழ், கழிவு டயர்களுக்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு இணைய முகப்பினை https://www.eprtyrescpcb.in ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் இயக்குகிறது. 31.03.2026 நிலவரப்படி, 30 டயர் உற்பத்தியாளர்கள் மற்றும் 37 மறுசுழற்சியாளர்களுக்கு விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பிற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.9. கலப்பு உப்பின் பயன்பாடு

### 6.9.1. ஜவுளி தொழிற்சாலைகள்

பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பை பின்பற்றும் ஜவுளி செயலாக்க அலகுகளில் உருவாகும் சுமார் 1,92,382 டன் கலப்பு உப்புகள், தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகங்களில், நீர் ஊடுருவாத தரை அமைப்புடன் கூடிய மூடப்பட்ட கிடங்குகளில் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ளன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின் படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கலப்பு உப்புகளை சுத்திகரித்து அகற்றும் வசதி செயல்பாட்டில் உள்ளது. இவ்வசதிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கிய இயங்குவதற்கான இசைவாணை 31.03.2028 வரை செல்லுபடியாகும். இதுவரை, ஜவுளி செயலாக்க அலகுகளிலிருந்து 54,589 டன் கலப்பு உப்புகள் இவ்வசதிக்கு மேலதிக

சுத்திகரிப்பு மற்றும் செயலாக்கத்திற்காக பெறப்பட்டுள்ளன.

### 6.9.2. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளில் உருவாகும் சுமார் 1,63,761 மெட்ரிக் டன் கலப்பு உப்புகள், தொழிற்சாலைகள் மற்றும் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகங்களில், மூடப்பட்ட கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் உருவாகும் கலப்பு உப்புகளைப் பயன்படுத்துவதற்கான ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் இன்னும் வெளியிடப்படவில்லை. தி/ள். ராணிப்பேட்டை தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனத்தின், பொது உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலையை உள்ளடக்கிய மேம்பாட்டுத் திட்டத்திற்காக மத்திய அரசின் ஒப்புதலையும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின்

தடையில்லா சான்றிதழையும் பெற்றுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, தோல் பதனிடும் தொழிற்துறையில் கலப்பு உப்புகளை நீண்டகால அடிப்படையில் திறம்பட நிர்வகிக்க உதவும்.

### 6.10. பாதிக்கப்பட்ட தளத்தை புனரமைத்தல்

#### 6.10.1. தி/ள். இந்துஸ்தான் யூனிலிவர் லிமிடெட், கொடைக்கானல்

தி/ள். இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் (HUL) நிறுவனம், 1984 முதல் 2001 வரை கொடைக்கானலில் மருத்துவப் பயன்பாட்டிற்கான கண்ணாடி பாதரச வெப்பமானி உற்பத்தி செய்து வந்தது. அதன் செயல்பாட்டினால், 17,858 சதுரமீட்டர் பரப்பளவு மண் பாதரசத்தால் மாசடைந்தது. மண் சுத்திகரிப்பிற்கான இடவசதி சார்ந்த இலக்கு அளவு ஒரு கிலோ மண்ணுக்கு 20 மில்லி கிராம் பாதரசம் (20 mg/kg) என அறிவியல் நிபுணர் குழு, தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம், நிர்ணயிக்கப்பட்டது. மண்

அகழ்வு, மண் கழுவுதல், பாதரச மீட்பு, மண் ஒரே மாதிரியாக்கம் மற்றும் மீண்டும் மண் நிரப்புதல் உள்ளிட்ட சுத்திகரிப்பு பணிகள் மார்ச் 2021–இல் தொடங்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட 17,858 சதுர மீட்டர் பரப்பளவு முழுமையாக சுத்திகரிக்கப்பட்டுள்ளது. இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை மேற்கொண்ட சரிபார்ப்பில் சீரமைக்கப்பட்ட மண் மாதிரி எடுக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் 20 மி.கி/கி.கி என்ற சீரமைப்பு அளவுகோலைப் பூர்த்தி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6.10.2. தி/ள். தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (டிசிசிஎல்) நிறுவனம் ராணிப்பேட்டை**

தமிழ்நாடு குரோமேட் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் (1995–ஆம் ஆண்டு மூடப்பட்டது), சுமார் 2,20,000 டன் குரோமியம் கழிவுக்கசடு இரண்டு ஹெக்டேர் பரப்பளவில் கொட்டப்பட்டதால், குரோமியம் மாசுபட்ட இடமாக

அடையாளம் காணப்பட்டது. தேசிய பசுமை தீர்ப்பாயம் (தென் மண்டலம்), O.A. எண் 186/2020 வழக்கில், 02.09.2022 அன்று பிறப்பித்த உத்தரவின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓராண்டுக்குள் இடைக்கால சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டது. இதையடுத்து, தீங்கு விளைவிக்கும் கழிவுக் குவியலை பாதுகாப்பான முறையில் மூடுதல், வடிகால் அமைப்புகள் மற்றும் தடுப்புப் பள்ளங்கள் அமைத்தல், மழைநீர் சேமிப்பு குளம் உருவாக்குதல் மற்றும் புதிய சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய தொழில்நுட்ப அறிக்கை ரூ.15 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் இழப்பீடு நிதியிலிருந்து இப்பணிகளுக்கான செலவினத்தை மேற்கொள்ள வாரியம் ஒப்புதல் அளித்தது. திட்ட மற்றும் ஒப்பந்தப்புள்ளி மேலாண்மை சேவைகளுக்காக சென்னை சுற்றுச்சூழல் மேலாண்மை நிறுவனம் நியமிக்கப்பட்டது.

இடைக்கால சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டு, அப்பணிகள் 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் மூன்றாவது வாரத்தில் தொடங்கப்பட்டன. பணிகள் முழுமையாக நிறைவடையும் வரை அவற்றின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து கண்காணிக்க தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு 06.05.2026 அன்று களஆய்வின்போது, பகுதி–1–இல் அபாயகரமான கழிவுகள் பகுதியளவு சமப்படுத்தப்பட்டு சாய்வாக வடிவமைக்கப்பட்டிருப்பதையும், சமப்படுத்தப்பட்ட கழிவுக் குவியலின் ஒரு பக்கத்தில் ஜியோமெம்பிரேன் பாதுகாப்பு உறை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் பதிவுசெய்தது.

## 7. விதிமீறலில் ஈடுபடும் தொழிற்சாலைகளுக்கான சட்ட அமலாக்க நடைமுறை

சுற்றுச்சூழல் சட்டங்களின் கீழ் இணங்காத தொழிற்சாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கவும், மூடுவதற்கான உத்தரவுகளைப்

பிறப்பிக்கவும் மற்றும் மின்சார விநியோகத்தை நிறுத்தவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது.

**மேல்முறையீட்டு ஆணையம்**

சென்னையில் செயல்பட்டு வரும் மேல்முறையீட்டு ஆணையம், 2000–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவுகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யும் தொழிற்சாலைகளின் மேல்முறையீடுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கிறது.

**தேசிய பசுமை தீர்ப்பாயம்**

மாநிலத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக 2012–ஆம் ஆண்டு முதல், சென்னையில் உள்ள மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தெற்கு மண்டல அமர்வு செயல்பட்டு வருகிறது.

## 7.1. நிகழ்நிலை சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது, மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையம் போன்ற பல்வேறு நீதித்துறை மற்றும் நீதி சார்ந்த அமைப்புகளில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை பதிவு செய்து கண்காணிப்பதற்காக நிகழ்நிலை சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

அனைத்து வழக்குக் கோப்புகளும் இம்மென்பொருள் மூலம் மட்டுமே செயலாக்கப்பட்டு வருகின்றன. நிகழ்நிலை சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு, சட்ட நடவடிக்கைகளை திறம்பட நிர்வகிப்பதற்கும், தடை ஆணைகள் மற்றும் உத்தரவுகளை கண்காணிப்பதற்கும்,

இணக்கத் தேவைகளை உரிய காலத்திற்குள் செயல்படுத்துவதற்கும் உதவுகிறது.

## 8. இதர செயல்பாடுகள்

### 8.1. சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம்

1994–ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டது, அவை மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சிறப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் பயிற்சி திட்டங்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பணியாளர்கள், தொழில்துறை பிரதிநிதிகள், நிறுவன நிர்வாகிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள், தொடர்புடைய துறை பணியாளர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்றன. இப்பயிற்சிகள், சுற்றுச்சூழல் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன.

கடந்த நிதியாண்டில், சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம், வாரிய பணியாளர்கள், தொடர்புடைய துறை அதிகாரிகள் மற்றும் இதர பங்குதாரர்களைச் சேர்ந்த மொத்தம் 678 பயிற்சியாளர்களுக்கு 14 உள்ளகப் பயிற்சி அமர்வுகளை நடத்தியுள்ளது. மேலும், வாரியத்தை சேர்ந்த 57 அலுவலர்கள், வெளிப்புற நிறுவனங்களால் நடத்தப்பட்ட 25 பயிற்சி வகுப்புகளில் பங்கேற்றுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்ட உதவி பொறியாளர்களுக்கு, வாரியத்தின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்கள் குறித்த அறிமுகத்தை வழங்கும் வகையில், ஏப்ரல்–மே 2025 காலகட்டத்தில் ஒரு வார கால தொடக்கப் பயிற்சி நடத்தப்பட்டது.

### 8.2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு ஆண்டும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வாரியம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றில் பேரணிகள்,

வினாடி–வினா போட்டிகள், மரக்கன்று நடும் நிகழ்ச்சிகள், ஆட்டோ ரிக்ஷா விழிப்புணர்வு பிரச்சாரங்கள், துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், காட்சிப் பலகைகள் அமைத்தல், வானொலி ஒலிபரப்புகள் மற்றும் குறும்படங்கள் திரையிடுதல் ஆகியவை அடங்கும். குறிப்பாக தீபாவளி, போகி, விநாயகர் சதுர்த்தி மற்றும் கார்த்திகை தீபம் போன்ற பண்டிகைக் காலங்களில் நடத்தப்படுகின்றன.

திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாவட்ட நிர்வாகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், கழிவு மேலாண்மை, கழிவுநீர் / தொழிற்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடு, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிகளுக்கான தடை மற்றும் அவற்றிற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் தொடர்பான சுயவிளக்க மாதிரிகள், சென்னை தீவுத்திடல் வர்த்தகக் கண்காட்சி, அரசு

கண்காட்சிகள் மற்றும் மாவட்ட புத்தகக் கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## 8.3. விதி மீறிய தொழிற்சாலைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கடந்த நிதியாண்டில், இசைவாணை நிபந்தனைகள் மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை மீறிய 132 தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூடல் உத்தரவு பிறப்பித்தது. மேலும், இசைவாணை நிபந்தனைகள் மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை மீறியதற்காக 5,613 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர விளக்க அறிவிப்பு வழங்கப்பட்டது.

## 8.4. நேரடி கலந்துரையாடல்

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், பொதுமக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்திடவும், வாரியம் ஒவ்வொரு மாதமும் 5–ஆம் தேதி அனைத்து அலுவலகங்களில் நேரடி கலந்துரையாடலை நடத்தி வருகிறது. இதன் மூலம், பொதுமக்கள் அலுவலர்களை நேரடியாகச் சந்தித்து தங்களது குறைகளை தெரிவித்து

தீர்வு பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. கடந்த நிதியாண்டில், மொத்தம் 105 குறைகள் பதிவு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, தீர்வு வழங்கப்பட்டது.

### 9. நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது, வறுமையை ஒழித்தல், பூமியைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் வளமான வாழ்வை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களுடன், செப்டம்பர் 2015–இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை உச்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களின் தொகுப்பாகும். 2030–ஆம் ஆண்டிற்கான நிலையான வளர்ச்சி, செயல் திட்டத்திற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது. தமிழ்நாட்டின் மாநிலக் குறியீட்டு கட்டமைப்பின் கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் தொடர்புடைய நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் அவற்றின் குறிக்கோள்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

**குறிக்கோள்: 6, சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்**

**இலக்கு 6.3**

2030–ஆம் ஆண்டிற்குள், மாசுபாட்டைக் குறைத்தல், கழிவுகளை நேரடியாக நீர்நிலைகளில் கொட்டுவதை ஒழித்தல், அபாயகரமான கழிவு பொருட்களின் வெளியேற்றத்தைக் குறைத்தல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரின் அளவை பாதியாகக் குறைத்தல், மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பான மறுபயன்பாட்டை கணிசமாக அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் நீரின் தரத்தை மேம்படுத்தலாம். இலக்கு 6.3.2–இன் (ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கழிவுநீர் தரநிலைகளுக்கு இணங்கும் தொழிற்சாலைகளின் சதவீதம்) மூலம் இம்முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள் தங்களின் கழிவுநீரை செயல்திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பதையும், அதிகளவு கழிவுநீரை உருவாக்கும் தொழிற்சாலைகள்

பூஜ்ய திரவக் கழிவு வெளியேற்ற முறையை நடைமுறைப்படுத்துவதையும் உறுதி செய்கிறது. இதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுபயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, தொழில்துறை பயன்பாட்டிற்கான மூல நீரின் பயன்பாடு குறைக்கப்பட்டு நீர்வளம் பாதுகாக்கப்படுகிறது.

**குறிக்கோள்:9, தொழில்துறை கண்டுபிடிப்பு மற்றும் உள்கட்டமைப்பு**

**இலக்கு 9.4**

2030–ஆம் ஆண்டிற்குள், நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் தொழிற்துறைகளை மேம்படுத்தி நவீனமயமாக்குதல், வளங்களின் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதை ஊக்குவித்தல். மேற்கண்ட இலக்கின் முன்னேற்றத்தை 9.4.1a (காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை) என்ற அளவுகாட்டியின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு

வாரியம், மாவட்டத் தலைமையகங்கள் மற்றும் தொழில்துறை வளாகங்களில் அமைந்துள்ள மொத்தம் 122 சுற்றுப்புறக் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்கள் (85 தேசிய காற்றுத் தரக் கண்காணிப்பு திட்ட நிலையங்கள், 34 தொடர்ச்சியான சுற்றுப்புறக் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்கள், 1 நடமாடும் தொடர்ச்சியான சுற்றுப்புறக் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையம் மற்றும் 2 நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகங்கள்) மூலம் சுற்றுப்புறக் காற்றின் தரத்தை கண்காணித்து வருகிறது. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு நகரங்கள், காற்றில் உள்ள துகள்மாசு தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட காற்றுத் தரத்தை எட்டாத நகரங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்நகரங்களில் காற்றுத் தரத்தை மேம்படுத்த தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல்

செயல்திறனை, காற்றுத் தர மேலாண்மை உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவும், சிறந்த சுற்றுச்சூழல் நடைமுறைகள் மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்களைப் பின்பற்ற ஊக்குவிக்கவும், தன்னார்வ பசுமை மதிப்பீடு முறையை செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ், தொழிற்சாலைகளுக்கு பிளாட்டினம், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகிய தரமதிப்பீடுகள் வழங்கப்படுகின்றன.

**குறிக்கோள்:12, பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி**

**இலக்கு 12.4**

2020–ஆம் ஆண்டிற்குள், இரசாயனங்கள் மற்றும் அனைத்து வகையான கழிவுகளையும் அவற்றின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பான முறையில் நிர்வகிப்பதையும், அவை வெளியேற்றப்படுவதை கணிசமாகக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேற்கூறிய குறிக்கோளை அடைய, 12.4.2a

(விரிவுபடுத்தப்பட்ட கண்காணிப்பு நிலையங்கள் மூலம் சுற்றுச்சூழல் தரக் கண்காணிப்பு) பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர் தரக் கண்காணிப்பு திட்டம் மற்றும் சென்னை நகர நீர்வழிகள் கண்காணிப்பு திட்டம் ஆகியவற்றின் கீழ் நீரின் தரத்தை கண்காணித்து வருகிறது. மேலும், தேசிய காற்றுத் தரக் கண்காணிப்பு திட்டம் மூலம் சுற்றுப்புறக் காற்றின் தரமும், சென்னையில் 10 இடங்களில் சுற்றுப்புற ஒலி அளவும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**இலக்கு 12.5**

2030–ஆம் ஆண்டிற்குள், கழிவு உருவாக்கத்தைத் தடுப்பது, குறைப்பது, மறுசுழற்சி செய்வது மற்றும் மறுபயன்பாடு செய்வது ஆகியவற்றின் மூலம் கழிவு உற்பத்தியை கணிசமாகக் குறைத்தல். 12.5.4 (ஒரு நபருக்கு உருவாகும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் அளவு) மற்றும் 12.5.5 (செயலாக்கப்பட்டு மறுசுழற்சியாளர்களுக்கு அனுப்பப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் விகிதம்) ஆகியவை

மேற்கூறிய குறிக்கோளை அடைவதற்காக வகுக்கப்பட்ட அளவுகாட்டிகள் ஆகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உருவாக்கும் தொழிற்சாலைகளை அடையாளம் கண்டு, தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்த நகர்வு) விதிகள், 2016-ன் கீழ் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், மறுபயன்படுத்துதல், இணைச் செயலாக்கம், எரித்தல் மற்றும் அறிவியல் பூர்வமான நிலப்பரப்பு அகற்றம் போன்ற முறைகளில் மேலாண்மை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமீப ஆண்டுகளில், கழிவுக் குறைப்பு, மறுபயன்பாடு மற்றும் வள மீட்பு நடவடிக்கைகள் அதிகரித்ததன் காரணமாக, எரிப்பு மற்றும் நிலப்பரப்பு அகற்றத்திற்கு அனுப்பப்படும் கழிவுகளின் அளவு குறைந்துள்ளது.

**குறிக்கோள்: 13, காலநிலை நடவடிக்கை**

**இலக்கு 13.3**

காலநிலை மாற்றத்தைத் தணித்தல், தழுவல் நடவடிக்கைகள், பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் தொடர்பாக கல்வி, விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டை ஊக்குவித்தல். 13.3.2 என்ற அளவுகாட்டி, காலநிலை மாற்றத்திற்கான தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்காக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் திறன்களை வலுப்படுத்துவதை அளவிடுகிறது. வாரியம், சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம் மூலம் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், தொழில்நுட்பப் பயிற்சிகளில் பங்கேற்பதை ஊக்குவிப்பதுடன், உலக சுற்றுச்சூழல் தினம், உலக ஓசோன் தினம், உலக பூமி தினம் போன்ற முக்கிய தினங்களில் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மாவட்ட அளவிலான பண்டிகைக் கால சுற்றுச்சூழல்

விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தி வருகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது வறுமையை ஒழித்தல், பூமியைப் பாதுகாத்தல் மற்றும் அனைத்து மக்களின் அமைதி மற்றும் வளமான வாழ்க்கையை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கான சர்வதேச வளர்ச்சி தொடர்பான அரசுகளுக்கிடையே ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளின் தொகுப்பாகும்.

## 10. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சீர்திருத்தங்கள்

### 10.1. எளிதாக வணிகம் செய்வதற்கான முன்முயற்சிகளின் கீழ் இசைவாணை நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்

தொழிற்சாலைகளுக்கான அனுமதிகளை விரைவுபடுத்தும் வகையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை வழங்கும் செயல்முறைகளை எளிமைப்படுத்தியுள்ளது. இயங்குவதற்கான இசைவாணை செல்லுபடியாகும் காலம் தொகுப்பு காலங்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சிவப்பு வகை தொழிற்சாலைகளுக்கு 5 ஆண்டுகளும், ஆரஞ்சு

வகை தொழிற்சாலைகளுக்கு 10 ஆண்டுகளும், பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு 14 ஆண்டுகளும் செல்லுபடியாகும் வகையில் மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் இசைவாணை புதுப்பித்தல் மேற்கொள்ளும் கால இடைவெளி குறைக்கப்பட்டுள்ளது. பச்சை வகை தொழிற்சாலைகள், ஆவணங்களின் இணக்கத்தை உறுதி செய்த பின்னர், கள ஆய்வு இன்றி, இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு மூலம் சுய சான்றளிப்பு அடிப்படையில் நிறுவுவதற்கான இசைவாணை பெறலாம். வெள்ளை வகை தொழிற்சாலைகளின் பட்டியல் 37–லிருந்து 609 வகைகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வெள்ளை வகை தொழிற்சாலைகள், நிர்ணயிக்கப்பட்ட தகவல் அறிக்கையை மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது. மேலும் இவ்வகை தொழிற்சாலைகளுக்கு நுண்ணாய்வு மேற்கொள்ளப்படமாட்டாது.

### 10.2. சுற்றுச்சூழல் கண்காணிப்பை வலுப்படுத்துதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஜவுளி மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலை வளாகங்கள் உள்ளிட்ட முக்கிய தொழில்துறை பகுதிகளில், சட்டவிரோத கழிவுநீர் வெளியேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் விதிமீறல்களைத் தடுக்கும் வகையில், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்ள 12 சிறப்பு பறக்கும் படைகளை செயல்படுத்தியுள்ளது. மேலும், சட்டவிரோதமாக கழிவுகளை கொட்டுதல் மற்றும் உயிரி மருத்துவக் கழிவுகள் மற்றும் பிற கழிவுகளை மாநில எல்லைகள் வழியாக சட்டவிரோதமாக கொண்டு செல்வதைத் தடுக்கும் வகையில், மாநில எல்லைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

### 10.3. தமிழ்நாடு குறுங்காடுகள் திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரிய தொழிற்சாலை நிதியுதவியுடன் கூடிய காடு வளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில்

குறுங்காடுகள் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் இலக்கு, உள்ளூர் இனங்களைச் சேர்ந்த மரக்கன்றுகளைப் பயன்படுத்தி 1,000 குறுங்காடுகளை உருவாக்குவதாகும். இதன் மூலம் 2030–31–ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் பசுமைப் பரப்பை 23.8%–லிருந்து 33%–ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரை, 924.4065 ஹெக்டேர் பரப்பளவில் 17,34,306 உள்ளூர் இன மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நடப்பட்ட மரங்களின் புவியிடக் குறியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரக்கன்றுகளின் உயிர்வாழ்வு நிலை, ஆரோக்கியம் மற்றும் சமூக–சுற்றுச்சூழல் தாக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அயலக மதிப்பீட்டை மேற்கொண்டு வருகிறது.

### 10.4. இணையவழி கழிவு பரிமாற்ற தளம்

சுழற்சி பொருளாதார நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையில், வாரியம், கழிவுகளை

உருவாக்கும் தொழிற்சாலைகளை அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சியாளர்கள், இணைச்செயலாக்கம் மேற்கொள்பவர்கள் மற்றும் கழிவுகளைப் பெறுபவர்களுடன் இணைக்கும் வகையில் இணையவழி கழிவு பரிமாற்ற இணையதளத்தை உருவாக்கியுள்ளது. மார்ச் 2026 நிலவரப்படி, 432 கழிவு உற்பத்தியாளர்கள் மற்றும் 151 கழிவு பயன்பாட்டாளர்கள் இத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம், தொழில்துறை கழிவுகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் மற்றும் வளமீட்பு நடவடிக்கைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

### 10.5. தன்னார்வ பசுமை மதிப்பீடு

தன்னார்வ பசுமை மதிப்பீடு, தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் செயல்திறனை ஐந்து நிலைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கிறது. அவை, பிளாட்டினம் (81–100), தங்கம் (61–80), வெள்ளி (41–60),

வெண்கலம் (21–40) மற்றும் சான்றளிப்பு (15–20) ஆகியவையாகும். இம்மதிப்பீடு முறை, ஆற்றல் திறன் மேம்பாடு, பசுமை இல்ல வாயு குறைப்பு, நீர் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் சுழற்சி முறையிலான கழிவு மேலாண்மை ஆகியவற்றை ஊக்குவித்து, 2030–ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கிறது.

### 10.6. மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றம்

மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றம் 2024–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, மணலி–எண்ணூர் பகுதிகளில் பசுமை மேம்பாடு, நீர்நிலைகள் மற்றும் சதுப்புநிலக் காடுகள் மறுசீரமைப்பு, திடக்கழிவு மற்றும் மாசு கட்டுப்பாடு, மேலும் சமூக உள்கட்டமைப்பு மேம்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு தரப்பினரை உள்ளடக்கிய ஒரு

குழுவாகும். மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றம், தொழிற்சாலைத் தரவுகள், இசைவாணை மேலாண்மை மற்றும் கழிவுநீர் வெளியேற்றம், தொழிற்சாலை உமிழ்வுகள் மற்றும் சுற்றுப்புறக் காற்றுத் தரம் ஆகியவற்றின் நிகழ்நேர கண்காணிப்பிற்கான ஒருங்கிணைந்த முகப்பலகை வசதியுடன் கூடிய அலுவலகம் மற்றும் அவசரகால நடவடிக்கை மையத்தை நிறுவியுள்ளது. நுண் தூசி மற்றும் குப்பைகளை அகற்றி, மாசுபாடு மற்றும் வடிகால் அடைப்புகளை குறைக்கும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 40 இயந்திரமயமாக்கப்பட்ட சாலை துப்புரவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றத்தின் கூடுதல் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 10.7. மாபெரும் நெகிழி சேகரிப்பு மற்றும் தூய்மை இயக்கம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில், நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் முழுவதும் ஒரு ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட சேகரிப்பு மற்றும் தூய்மைப் பணியின் மூலம், சுமார் 1,931 டன் கழிவுகள் சேகரிக்கப்பட்டன. இதில் 743 டன் நெகிழிக் கழிவுகள் அடங்கும். இதில், 389 டன் நெகிழிக் கழிவுகள் மறுசுழற்சிக்காகவும், 354 டன் நெகிழிக் கழிவுகள் இணைச்செயலாக்கத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளன.

## 10.8. தமிழ்நாடு மீன்வலை முன்முயற்சி

கடற்கரை நெகிழி மாசுபாட்டைத் தடுக்கும் நோக்கில், தமிழ்நாடு மீன்வலை முன்முயற்சி, சென்னையின் காசிமேடு பகுதியில் முதல் கைவிடப்பட்ட மீன்பிடி வலை சேகரிப்பு மையத்தை நிறுவியுள்ளது. இம்மையத்தின் மூலம் 36,605 கிலோ கைவிடப்பட்ட மீன்பிடி வலைகள் சேகரிக்கப்பட்டு,

அவை மறுசுழற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட வலைகளுக்காக மீனவர்களுக்கு ரூ.13.12 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அனைத்து 14 கடலோர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

# இணைப்பு – I




# இணைப்பு – II



## இணைப்பு – III

| நீர்நிலை | எண்ணிக்கை | இருப்பிட விவரங்கள் |
|---|---|---|
| ஆறுகள் (12) | 71 | காவிரி, தாமிரபரணி, பவானி, பாலாறு, வைகை, திருமணிமுத்தாறு, சரபங்கா, வெண்ணாறு, வசிட்ட, அமராவதி, கூவம் மற்றும் அடையாறு. |
| ஏரிகள் (8) | 8 | உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு மற்றும் செங்குன்றம். |
| நிலத்தடி நீர் (8 மாவட்டங்கள்) | 22 | ஈரோடு, நாமக்கல், கரூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| கடல் நீர் (14 கடலோர மாவட்டங்கள்) | 34 | கடலோர பகுதி – 32<br>கடற்கரை – 2 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 16 | சென்னை, கடலூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு (பெருந்துறை) மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் |
| வடிகால்கள் | 4 | சென்னை |
| கால்வாய்கள் | 2 | சென்னை |
| குளங்கள் | 1 | திருவள்ளூர் |
| ராம்சார் (RAMSAR) தளங்கள் | 20 | பிச்சாவரம் சதுப்புநிலம், கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், சுசீந்திரம் தேரூர் சதுப்பு நில வளாகம், வேம்பனூர் சதுப்பு நில வளாகம், கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம், உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம், வடுவூர் பறவைகள் |

| நீர்நிலை | எண்ணிக்கை | இருப்பிட விவரங்கள் |
|---|---|---|
| | | சரணாலயம், சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம், மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோளக் காப்பகம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், பள்ளிக்கரணை சதுப்பு நிலக் காப்பகம், கரைவெட்டி பறவைகள் சரணாலயம், லாங்வுட் சோலா காப்புக் காடு,நஞ்சராயன் பறவைகள் சரணாலயம், கழுவேலி பறவைகள் சக்கரக்கோட்டை பறவைகள் சரணாலயம், தேர்த்தாங்கல் பறவைகள் சரணாலயம் |
| **மொத்தம்** | **178** | |

**டாக்டர் வே. க. ராஜீவ்**
**சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை**
**மாற்றத்துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைமை அலுவலகத்தில் MERRC மற்றும் வெள்ளை வகைத் தொழிற்சாலைகளுக்கான இணையதளங்களை தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்டார்.



மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தை 07.07.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள், MERRC அலுவலகத்தைப் பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தார்.




நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகம் – களத்திலேயே சுற்றுச்சூழல் மாதிரிகளைச் சேகரித்து, ஆய்வு மேற்கொண்டு, மாசு நிலவரத்தை விரைவாகக் கண்காணிக்க உதவும் நவீன ஆய்வக வசதி.



முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம் – இரண்டாம் கட்டம் – காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை குறித்த முதுகலைப் பட்டயப்படிப்பு தொடக்க விழா.




முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம் – இரண்டாம் கட்டம் – முதுகலைப் பட்டயப்படிப்பு தொடக்க விழா – குழு புகைப்படம்.



நீலக்கொடிக் கடற்கரையாகத் தேர்வு செய்ய முன்மொழியப்பட்டுள்ள காமேஸ்வரம் கடற்கரை, நாகப்பட்டினம்.



நீலக்கொடிக் கடற்கரையாகத் தேர்வு செய்ய முன்மொழியப்பட்டுள்ள காமேஸ்வரம் கடற்கரை, நாகப்பட்டினம்.



இயற்கையிலிருந்து ஊக்கம் பெறுவோம்!

**காலநிலைக்காக!**

**நமது எதிர்காலத்திற்காக!**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.